மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம்

ஆண்டறிக்கை - 2018

மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம்

இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,
கொழும்பு 07

தொ.பே.: (+94) 112 697758
(+94) 112 681052
(+94) 112 696261

இணையத்தளம்: https://pgim.cmb.ac.lk

மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம்

பேராசிரியர் எச்.ஜே டி சில்வா
பணிப்பாளர்
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

பேராசிரியர் சேனக ராஜபக்ஷ
பிரதி பணிப்பாளர்
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

எஸ். அனுஷா
பிரதிப் பதிவாளர்
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

தூரநோக்கு

இந்நாட்டினதும் பிராந்தியத்தினதும் சுகாதாரத் தேவையை நிறைவு செய்து உலக சுகாதாரத் துறைக்கு பங்களிப்புச் செலுத்துமுகமாக உயர் திறமை மிக்க சிறந்த நிபுணர்களையும் ஏனைய தொழில் வல்லுனர்களை உருவாக்குவதில் தனிச் சிறப்புமிக்க சர்வதேச அங்கீகாரம் பெற்ற மையமாகப் பரிணமித்தல்.
பல்கலைக்கழக அந்தஸ்த்தை பெற்றுக்கொள்வதற்கான இறுதி நோக்கத்துடன் கல்விப்புலமை, நிதி, நிர்வாகம் தொடர்பாக சுதந்திரமாக தொழிற்படும் ஒரு நிறுவனமாக பரிணமித்தல்.

செயற்பணி

இலங்கை மக்களுக்கும், பிராந்தியம் மற்றும் உலகிற்கு மிகச் சிறந்த மனிதாபிமான சுகாதார உபசரிப்பை வழங்குவதற்காக உயர் தரம் மிக்க, தேர்ச்சி மற்றும் அர்ப்பணிப்புள்ள சிறப்பு நிபுணர்கள் மற்றும் ஏனைய தொழில் வல்லுனர்களை உருவாக்குவதற்குத் தேவையான பட்டப்பின் படிப்பு கல்வி சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் மேம்பாடு, செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

பணிப்பாளரின் செய்தி

2018 ஆம் ஆண்டிற்கான மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் மருத்துவர்கள் மற்றும் பல் சிகிச்சை மருத்துவர்களுக்கு விசேட பயிற்சியளித்தலுக்கு பொறுப்பான ஒரேயொரு நிறுவகமான மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் ஆகும். தற்பொழுது இதில் 23 கற்கை சபைகள் மற்றும் 35 விசேடத்துவ சபைகளின் கீழ் எம்.டி பட்டம், எம்.எஸ்.சீ பட்டம் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா, பட்டப்பின் சான்றிதழ் மற்றும் நிபுணத்துவ மருத்துவர்களுக்கான சபை உறுதிச் சான்றிதழ் வழங்குதல் போன்ற 124 கற்கை திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. தற்போது 1007 புதிய ஆட்சேர்ப்புக்கள் உட்பட மொத்தம் 3921 பட்டப்பின் படிப்பு பயிற்சியாளர்கள் பயிற்சிப் பாடநெறிகளில் பதிவு செய்துகொண்டுள்ளனர். 2018 ஆம் ஆண்டில் நாம் 132 பரீட்சைகளை நடாத்தியதுடன் 364 எம்.டி பட்டங்கள் மற்றும் 80 எம்.எஸ்.சீ பட்டங்கள், 257 பட்டப்பின் டிப்ளோமா, 37 பட்டப்பின் சான்றிதழ் மற்றும் 199 நிபுணத்துவ மருத்துவர்களுக்கான சபை உறுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டில் எமது நீண்ட காலத் தேவையாக இருந்த இலத்திரணியல் சார்ந்த சிக்கல்கள் வங்கியொன்று தாபிக்கப்பட்டது. இராணுவ மருத்துவ விஞ்ஞானம் பற்றிய முதுமாணிப் பட்டம், ஆய்வுகூட மூலக்கூற்று நோயியல் சம்பந்தமான எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ், சிகிச்சையியில் மரபணு விஞ்ஞானம் பற்றிய பட்டப்பின் எம்.டி. துணை சிறப்பு மற்றும் சபை சான்றிதழ் மற்றும் உறுப்பு மாற்றல் உணர்விழப்பியல் மற்றும் தீவிர நிலைமைகள் கண்காணிப்பு சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தல் போன்ற புதிய நான்கு திட்டங்களுக்காக பட்டப் பிரகடனப் பத்திரம் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டது. இரண்டு பட்டப்பின் டிப்ளோமா முதுமாணி மட்டம் வரை உயர்த்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் காணப்படும் கற்கைத் திட்டங்களில் விடயப் பரப்பு மற்றும் 05 பட்டப் பிரகடனப் பத்திரங்கள் திருத்தியமைக்கப்பட்டதுடன் மேலும் 08 திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

ரொட்னி வீதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் எமது புதிய கற்கைக் கட்டிடம் அநேகமாக நிறைவடைந்துள்ளதுடன், அடுத்த ஆண்டில் அதில் அலுவல்களை ஆரம்பிக்க முடியுமாக இருக்கும். கட்டிடத்திற்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை நிறுவகம் ஈட்டும் வருமானத்தின் மூலம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள், கல்வி சார் ஆளணி, நிபுணத்துவ கற்கை சபை மற்றும் பரீட்சை சபை அங்கத்தவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோர் இந்த ஆண்டில் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்திற்கு வழங்கிய பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அத்துடன் விசேடமாக தமது அலுவல்களை மிகச் சிறப்பான வகையில் நிறைவேற்றியமைக்காக எமது நிர்வாக மற்றும் எழுதுவினைஞர் ஆளணிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் எச். ஜனக டி சில்வா
பணிப்பாளர் / மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

இலக்குகள்

- கற்பித்தல் - கற்றல், பயிற்சியளித்தல் மற்றும் ஆய்வுகளில் நிலையான உயர் தரங்களை அடைதல்
- தேசிய சுகாதார சேவை தேவைகளை பூர்த்தி செய்ய முடியுமான வகையில் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தல்.
- நாட்டின் சுகாதார மருத்துவ கல்விக் கொள்கைகளை முறையாக தயாரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.
- பட்டப்பின் படிப்பு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பில் நிறுவகத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தல்.
- நிறுவகத்தின் அதிகரித்துவரும் கல்வித் தேவைகளை நிவர்த்தி செய்ய முடியுமான பிரகாரம் மற்றும் அதன் தரத்தை உறுதி செய்யும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

குறிக்கோள்கள்

- உள்நாட்டுத் தேவையை நிவர்த்தி செய்ய முடியுமான வகையில் உயர் தரமான சுகாதார சேவைகளுக்காக போதுமானளவிலான மனிதவளத்தை உருவாக்குதல்
- தொடர்ச்சியான கற்றல் மூலம் சுகாதார சேவை தொழில் வல்லுனர்களின் ஆற்றல்கள் மற்றும் நிபுணத்துவத்தை பேணவரல் மற்றும் மேம்படுத்தல்.
- சுகாதாரத்துறை சார்ந்த தொழில் வல்லுனர்களுக்கான தொடர்ச்சியான கற்கைகளுக்கு வசதியளிப்பதற்காக செயல் முறையொன்றை உருவாக்குதல்.
- மருத்துவத்துறை சார்ந்த தொழில் வல்லுனர்களிடத்தில் ஆக்கபூர்வமாக மனப்பாங்குகளையும், சுய கற்றல் பழக்கத்தையும் மேம்படுத்தல்.
- பட்டப்பின் படிப்பு கற்கைகளுக்கான வளங்களையும், தகுந்த தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தலை ஊக்குவித்தல்.
- சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்கும்போது சுகாதார சேவைகள் குழுவினராக அணுகும் எண்ணக் கருவை அறிமுகஞ் செய்தல்.
- பலவீனங்கள் மற்றும் மேம்படுத்திக்கொள்ள வேண்டிய பிரிவுகள் மற்றும் தகவல்களை சேகரித்தல் என்பவற்றுக்காக மருத்துவக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பீட்டுக்குட்படுத்தல்.
- நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சையளித்தல் உபசரிப்புடன்கூடிய சேவைக்காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
- இலங்கையில் பட்டப்பின் படிப்பு மட்டத்திலான மருத்துவக் கல்வியை உயர் மட்டத்தில் பேணி வருவதற்காக வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பரஸ்பர நன்மை கிடைக்கும் வகையிலான கல்வி சார்ந்த தொடர்புகளை மேம்படுத்திக் கொள்ளல் மற்றும் நாட்டின் சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்தலைப் போன்றே பிராந்தியம் மற்றும் உலகம் பூராவும் மருத்துவக் கல்வியின் பல்வேறு துறைகளுக்கு செயற்பாட்டுடன்கூடிய பங்களிப்பை வழங்கும் மருத்துவ நிபுணர்களை உருவாக்கும் நிதி ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் சுதந்திரமானதொரு நிறுவகமாகவும், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நிறுவகமொன்றாகப் பரிணமித்தல்.

உள்ளடக்கம்

1. முகாமைத்துவ சபை 7

2. வரலாற்றுப் பின்னணி 9

3. வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் 11

4. உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள் 11

5. கல்விசார் ஆளணி பற்றிய விபரங்கள் 11

6. கல்விசாரா ஆளணி பற்றிய விபரங்கள் 12

7. ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புக்கள், வெளியீடுகள் பற்றிய விபரங்கள 12

8. நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் 13

9. ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள் பற்றிய விபரங்கள் 13

10. மீண்டெழும் செலவினங்கள் பற்றிய விபரங்கள் 14

11. மூலதனச் செலவினங்கள் பற்றிய விபரங்கள் 14

12. நிதிசார் முன்னேற்றம் (செலவுகள்) பற்றிய விபரங்கள் 15

13. நிதிசார் முன்னேற்றம் (ஈட்டிய வருமானம்) பற்றிய விபரங்கள் 15

14. நிதி செயல்திறன் பகுப்பாய்வு – 2018 15

15. உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரங்கள் - 2018 15

16. **ஏனைய தகவல்கள்** 16

16.1.கல்விசார் செயற்பாடுகள் 16

16.2. மதிப்பீடுகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான அலுவல்கள் 29

16.3.நூலகம் 39

16.4. பொது நிர்வாகம் 46

16.5. நிதிசார் தகவல்கள் 51

17. கணக்காய்வு அறிக்கை 54

1. முகாமைத்துவ சபை

முகாமைத்துவ சபை பிரதான நிறைவேற்றுக் குழுவைப் போன்றே நிர்வாக அதிகார சபையும் ஆகும்.

பேராசிரியர் ஜானக டி சில்வா, பணிப்பாளர், மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்.

பேராசிரியர் சேனக்க ராஜபக்ஷ, பிரதிப் பணிப்பாளர், மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்.

பேராசிரியர் ஜயந்த ஜயவர்தன, தற்போதைய பணிப்பாளருக்கு கிட்டிய முன்னாள் பணிப்பாளர், மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்.

பேராசிரியர் எஸ்.டீ.ஜயரத்ன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் **(தலைவர்)**

திரு.பத்மசிரி ஜயமான்ன, செயலாளர் / உயர்கல்வி அமைச்சு

திருமதி வசந்தா பெரேரா, செயலாளர் /சுகாதார அமைச்சு

திரு.ஏ.கே.டீ.டீ.டீ. அரந்தர, நிதி அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்

மருத்துவர் அனில் ஜாசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பேராசிரியர் ஜெனிபர் பெரேரா, பீடாதிபதி/ மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஆசிரி அபேகுணவர்தன, பீடாதிபதி / மருத்துவ பீடம், பேராதனை பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சமன் விமலசுந்தர, பீடாதிபதி/ மருத்துவ பீடம், றுஹுணு பல்கலைக்கழகம்.

மருத்துவ கலாநிதி எஸ்.ரவிராஜ் பீடாதிபதி/ மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் எஸ்.ஜீ. யசவர்தன, பீடாதிபதி/ மருத்துவ பீடம், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

பேராசிரியர் பீ.எஸ்.விஜேசிங்க, பீடாதிபதி/ மருத்துவ பீடம், களணி பல்கலைக்கழகம்.

மருத்துவ கலாநிதி ஜே.ஏ.வீ.பீ. ஜயசிங்க, பீடாதிபதி/ பல் மருத்துவ பீடம், பேராதனை பல்கலைக்கழகம்.

மருத்துவ கலாநிதி ஏ.என்.அருள் பிரகாசம், பீடாதிபதி/ சுகாதார பணியாளர்கள் பீடம், இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

பேராசிரியர் எஸ்.எச்.சிரிபத்தன, பீடாதிபதி/ மருத்துவ மற்றும் துணை விஞ்ஞான பீடம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

பேராசிரியர் நந்ததேவ சமரசேக்கர, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

பேராசிரியர் திருமதி ரஞ்சனீ கமகே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

பேராசிரியர் சந்திரிக்கா விஜேரத்ன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

மருத்துவ கலாநிதி ஹர்ஷ கப்ரால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

பேராசிரியர், ஸ்ரீனாத் சந்திரசேக்கர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

மருத்துவ கலாநிதி மஹானார குணசேக்கர, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

பேராசிரியர் லக்ஷ்மன் ரத்னாயக்க, சபையினால் பெயர் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்

திரு.ஜே.எம்.சுவாமிநாதன், சபையினால் பெயர் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்

மருத்துவ கலாநிதி லால் பனபிட்டிய, பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள் -

மருத்துவ கலாநிதி சந்தன கஜநாயக்க, பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பல் மருத்துவ சேவைகள்)

மருத்துவ கலாநிதி சுதத் சமரவீர, பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி)

பேராசிரியர் வீ.பீ.விக்கிரமசிங்க, பீடத்தின் பிரதிநிதி/ மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர் எம்.வீ.ஜீ.பின்டோ, பீடத்தின் பிரதிநிதி/ மருத்துவ பீடம், பேராதனை பல்கலைக்கழகம்.

மருத்துவ கலாநிதி கே.முகந்தன், பீடத்தின் பிரதிநிதி / மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் தீபக்க வீரசேக்கர, பீடத்தின் பிரதிநிதி / மருத்துவ பீடம், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஏ.பீ. டி சில்வா, பீடத்தின் பிரதிநிதி / மருத்துவ பீடம், களணி பல்கலைக்கழகம்.

மருத்துவ கலாநிதி டப்ளியூ.எம்.பீ.எஸ்.கே. விஜேகோன், பீடத்தின் பிரதிநிதி / பல் மருத்துவ பீடம், பேராதனை பல்கலைக்கழகம்.

மருத்துவ கலாநிதி எம்.திருகுமார், பீடத்தின் பிரதிநிதி / சுகாதார பணியாளர்கள் பீடம், இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்.

ஆர்.எஸ்.பீ.பீ.தல்கஸ்பிடிய, மருத்துவ விஞ்ஞானம் சார்ந்த விஞ்ஞான பீடம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்.

2. வரலாற்றுப் பின்னணி

1870 ஆம் ஆண்டு இலங்கை மருத்துவ கல்லூரி நிறுவப்பட்டதுடன் இலங்கையில் மருத்துவ கல்வியானது ஆரம்பிக்கப்பட்டதுடன், அது 1942 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதுடன் அதன் மருத்துவ பீடமாக இந்த இலங்கைப் பல்கலைக்கழகம் மாற்றப்பட்டது. எம். டி. மற்றும் எம்.ஓ.ஜீ பட்டங்களை வழங்குவதற்கான பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டு மற்றும் எம். எஸ் பட்டத்தை வழங்குவதற்கான பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்ட 1953 ஆம் ஆண்டு வரையிலும் இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் மருத்துவ பட்டப்பின் படிப்பு பட்டங்களை வழங்குவதற்கான பரீட்சைகள் நடத்தப்படவில்லை.

அன்று எந்த விதமான கட்டமைக்கப்பட்ட அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பயிற்சிகள் இருக்கவில்லை. மருத்துவ பட்டப்பின் படிப்பு பயிற்சிகளை ஐக்கிய இராச்சியத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் மூலமாகவே பெற்றுக்கொள்ள முடியுமாகியது. மருத்துவ நிபுணர்களை நியமனம் செய்யும்போது அவற்றினால் வழங்கப்பட்ட MRCP, FRCS, FFARCS, MRCOG, FRCR, MRCPath, MRCPsych, FDSRCS ஆகிய பட்டத் தகைமைகள் சுகாதார அமைச்சினாலும், பல்கலைக்கழகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளாக இருந்தன. இந்த வெளிநாட்டு பயிற்சித் திட்டத்திற்கு பதிலாக மேற்பார்வையுடனான 3 வருட சேவைக்கால பயிற்சியளித்தலின் பின்னர் பரீட்சையும் நடாத்தப்பட வேண்டுமென மருத்துவ பட்டப்பின் படிப்பு கல்வி ஆலோசனைக் குழுவொன்றின் ஊடாக அரசிற்கு 1973 ல் சிபார்சு செய்யப்பட்டது. அதற்கமைய, 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1976 ஆம் ஆண்டு பட்டப்பின் படிப்பு மருத்துவ நிறுவகம் (IPGM) நிறுவப்பட்டு, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி ஹல்வ்டன் மாஹ்லர் அவர்களால் 1976 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆந் திகதி பட்டப்பின் படிப்பு மருத்துவ நிறுவகம் (IPGM) உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் முதலாவது பணிப்பாளராக பேராசிரியர், கே. என். செனவிரத்ன நியமிக்கப்பட்டார்.

எவ்வாறாயினும், ஐக்கிய இராச்சியத்தின் கல்லூரிகளினால் நடாத்தப்பட்ட பரீட்சைகள் கொழும்பில் தொடர்ந்து நடாத்தப்பட்டதுடன், மருத்துவர்கள் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்படும் தோற்றுவதைப் பார்க்கிலும் ஐக்கிய இராச்சித்தில் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தமை காரணமாக புதிதாக அமைக்கப்பட்ட நிறுவகத்தின் வேலைக்கு தடங்கல் ஏற்பட்டது. எனவே இந்த நிலைமையை மீளாய்வு செய்ய வேண்டியேற்பட்டது. ஐக்கிய இராச்சியத்தின் கல்வி நிறுவகங்களின் ஊடாக இலங்கையில் பட்டப்பின் படிப்பு பரீட்சைகளை நடாத்துவதனை 1980 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்துவதற்கும், பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் வழங்கப்படும் பட்டப்பின் படிப்புக்கு முழு அங்கீகாரத்தையும் வழங்குவதற்கு மற்றும் கவனம் செலுத்துவதற்கும் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

நிறுவகத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் 1979 இது மீளமைக்கப்பட்டு மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIM) என மீள் பெயரிடப்பட்டது.

இதன் முதலாவது பணிப்பாளராக டாக்டர். எஸ். ஏ. கப்ரால் நியமிக்கப்பட்டார். அதன்படி, மேற்குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகக் (PIGM) கட்டளைச் சட்டமானது 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆந் திகதி செயல்வலுப்பெற்றது.

மருத்துவ விஞ்ஞானத்தின் பல்வகை நிபுணத்துவங்களுக்கான கற்கை சபைகள் மீளமைக்கப்பட்டதுடன் வெவ்வேறு விசேடத்துவங்களுக்கான கற்கை பாடநெறிகளும், பரீட்சைகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. அவைகள் உணர்விழப்பியல், சமூக மருத்துவம், பல் சத்திரசிகிச்சை, குடும்ப மருத்துவமும், பொது சிகிச்சையளித்தலும், மருத்துவம், மகப்பேற்று மருத்துவமும் பெண் நோயியல், கண்நோயியல், நோயியல், குழந்தையியல், உள மருத்துவம், கதிரியக்கவியலும் சத்திரசிகிச்சையியல் போன்ற பல்வேறு நிபுணத்துவப் பாடநெறிகள் மற்றும் பரீட்சைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. 1985 இல், மேலும் நான்கு கற்கை சபைகள் அதாவது, தடயவியல் மருத்துவம், மருத்துவ நுண்ணுயிரியல், காது குரல்வளை நோயியில் மற்றும் புற்றுநோய் சிகிச்சையியல் என்பன நிறுவப்பட்டன. 1990 ல் பேராசிரியர் ஆர்.ஜீ பாணபொக்கே அவர்கள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். மருத்துவ நிர்வாகத்திற்கும், தோல் நோயியல் கற்கை சபைகள் 1994 லும், மேகவியலுக்கான கற்கை சபை 2001 லும் நிறுவப்பட்டன. டாக்டர் ஜே.பீ. பீரீஸ் அவர்கள் 1995ல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், பேராசிரியர் திருமதி லலிதா மெண்டிஸ் அவர்கள் 2002 இலும், தொடர்ந்து பேராசிரியர் ரிஷ்வி ஷெரிப் அவர்கள் 2006 லும், பேராசிரியர் ஜயந்த ஜயவர்த்தன 2012 இலும், பேராசிரியர் எச். ஜனக டி சில்வா 2014 இலும் இந்த நிறுவகத்தின் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். பிரதி பணிப்பாளர் பதவி 2011 இல் நிறுவப்பட்டதுடன், இப் பதவியை பேராசிரியர் ஜயந்த ஜயவர்தன, பேராசிரியர் பிரசான்த விஜேசிங்க, பேராசிரியர் கிறிசாந்த அபேசேன, பேராசிரியர் சேனக ராஜபக்ஷ ஆகியோர் வகித்தனர. 1980 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் 2014 யூலை 1 முதல் செயல்வலுப்பெற்றதுடன் திருத்தியமைக்கப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் சில புதிய கற்கை சபைகளும், விசேடத்துவ சபைகளும் நிறுவப்பட்டன.

3. வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரம்

பாடநெறி	பயிலுனர்களின் எண்ணிக்கை	கல்விசார் ஆளணியின் எண்ணிக்கை
பட்டப்பின் படிப்பு சான்றிதழ் கற்கை நெறி	13	*
பட்டப்பின் டிப்ளோமா	610	*
எம்.எஸ்.சீ	285	*
முன் எம்.டீ. மற்றும் எம்.டீ. (பகுதி 1)	1546	*
பட்டப்பின் எம்.டீ (உள்நாடு)	672	*
எம்.டீ (வெளிநாடு)	651	*
மொத்தம்	**3921**	

* வருகை அடிப்படையில் துறைசார் நிபுணர்கள் அழைக்கப்படுகின்றனர்.

4. உள்நாட்டு மாணவர்கள் பற்றிய விபரங்கள்

பாடநெறி	அனுமதி 2018	1 ஆம் வருடம்	2 ஆம் வருடம்	3 ஆம் வருடம்	4 ஆம் வருடம்	5 ஆம் வருடம்	6 ஆம் வருடம்	7 ஆம் வருடம்	மொத்தம்
சான்றிதழ்	13	13							13
பட்டப் பின் டிப்ளோமா	283	496	114						610
எம்.எஸ்.சீ	130	192	94						286
உள்ளக/பகுதி 1	84	63	65						143
முன் எம்.டீ. / பட்டப்பின் எம்.டீ (உள்நாடு)	497	486	527	533	497	149	26		2218
வெளிநாட்டுப் பயிற்சி					313	284	53	1	651
மொத்தம்	**1007**	**1250**	**800**	**533**	**810**	**433**	**79**	**1**	**3921**

5. கல்விசார் ஆளணி பற்றிய விபரங்கள்

பீடம்/பிரிவு	பாடம்/ துறை	சிரேஷ்ட பேராசிரியர்	பேராசிரியர்	சிரேஷ்ட விரிவுரையாளர்	விரிவுரையாளர்	உதவி விரிவுரையாளர்	ஆலோசகர்	ஏனைய
ம.ப.ப.நிறுவகம்(PGIM)	பணிப்பாளர்	01						
ம.ப.ப.நிறுவகம்(PGIM)	பிரதிப் பணிப்பாளர்		01					
ம.க.வ.நிலையம்(MERC)	சிகிச்சையளிப்பு			01				
ம.க.வ.நிலையம்(MERC)	மருத்துவக் கல்வி			01				
ம.க.வ.நிலையம்(MERC)	உயிரியல் மருத்துவ தகவல் அறிவியல் பற்றிய விசேட கவனம் ஈர்க்கப்படும் மருத்துவக் கல்வி			01				
கல்விசார்	பாடநெறி ஒருங்கிணைப்பாளர்							04

ம.க.வ.நிலையம்(MERC)	தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர்	02
நூலகம்	சிரேஷ்ட உதவி நூலகர்	02

6. கல்விசாரா ஆளணி பற்றிய விபரங்கள்

பீடம்/பிரிவு	நிர்வாகம்	கல்விசார் உதவி	தொழில் நுட்ப ஆளணி	எழுதுவினைஞர், இணையான	சிற்றூழியர்
பணிப்பாளர் அலுவலகம்		-	-	01	01
மேலதிக பதிவாளர் அலுவலகம்	01	-	-	01	-
பொது நிர்வாகம்	01	-	-	11	08
கணனிப் பிரிவு	-	02	-	01	-
மருத்துவ விளக்கப் பிரிவு	-	-	01	-	-
மருத்துவக் கல்வி வள நிலையம்	-	01	-	01	01
நிதி	02	-	-	10	02
பரீட்சைகள்	03	-	01	21	03
கல்விசார்	02	-	-	16	04
நூலகம்	-	-	-	10	05

7. ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

விடயம்	சமர்ப்பிப்புக்களின் எண்ணிக்கை
ஆய்வுகளின் எண்ணிக்கை (இதுவரை மேற்கொள்ளப்பட்டுவரும்)	22
பட்டப் படிப்பு ஆய்வுக் கட்டுரைகள், விளக்கவுரைகள்	-
கட்டுரைகள், ஆய்வறிக்கைகள்	25
மொத்தம்	**47**

8. நிகழ்ச்சிகள் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் பற்றிய விபரங்கள்

விடயம்	பங்குபற்றிய எண்ணிக்கை	நிறைவு செய்த எண்ணிக்கை
பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சிகள்		54
பட்டப்பின் டிப்ளோமா படிப்பு நிகழ்ச்சித் திட்டம்		05
பட்டப் பாடநெறி நிகழ்ச்சிகள்	NR	NR
டிப்ளோமா நிகழ்ச்சிகள்	NR	NR
சான்றிதழ் பாடநெறிகள்	NR	NR
ஏனையவை		
பட்டப்பின் சான்றிதழ் நிகழ்ச்சிகள்		NR
மொத்தம்		**59**

NR - ஏற்புடையதாகாது

9. ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள் பற்றிய விபரம்

2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு பின்வரும் பயிற்சித் திட்டங்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- உறுப்புக்கள் மாற்று உணர்விழப்பியல் மற்றும் தீவிர நிலைமை சிகிச்சை சம்பந்தமாக விசேட கவனத்துடனான உணர்விழப்பியல் சம்பந்தமான சபை சான்றளிப்பு.

2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் புதிய பயிற்சித் திட்டங்களுக்கான பட்டம் தொடர்பான விடயத் தொகுப்பை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இராணுவ மருத்துவ எம் எஸ் சி பட்டம்
- ஆய்வுகூட மூலக்கூற்று மருத்துவ எம் டி பட்டம்

நிலவும் திட்டங்களில் கீழ் குறிப்பிடப்படும் பாடத்திட்டங்கள் மற்றும் பட்டம் தொடர்பான விடயத்தொகுப்பு இந்த ஆண்டினுள் திருத்தியமைக்கப்பட்டது.

- மருத்துவக் கல்வி எம் டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
- பிளாஸ்டிக் ம்றறும் சீரமைப்பு சத்திர சிகிச்சை சபை சான்றிதழ்
- நரம்பியல் சத்திர சிகிச்சை சபை சான்றிதழ்
- சிறுநீரகவியல் சபை சான்றிதழ்
- சிறுநீரக சத்திர சிகிச்சை சபை சான்றிதழ்
- தடயவியல் மருத்துவம் எம் டி
- முதியோர் தொடர்பான மருத்துவம் (Elderly Medicine) பற்றிய பட்டப்பின் படிப்பு (தற்போது மூப்பியல் பற்றிய மருத்துவம் (Geriatric Medicine) என மீளப் பெயரிடப்பட்டுள்ளது)

பின்வருவன தொடர்பாக மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

- மருத்துவ நிர்வாகம் சம்பந்தமான எம் டி பட்டம் (AAAEC அங்கீகாரத்துடன், முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது.)
- புற்று நோயியல் சம்பந்தமான எம் டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
- மருத்துவ நுண்ணுயிரியல் சம்பந்தமான எம் டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
- மரபியல் மருத்துவம் சம்பந்தமான சபை சான்றிதழ்
- மருத்துவ நிர்வாகம் சம்பந்தமான எம் எஸ் சீ பட்டம்
- உடற்கூற்றியல் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
- உடலியல் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
- பொதுவான பல் மருத்துவம் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

10. மீண்டுவரும் செலவினங்கள் பற்றிய விபரங்கள்

விடயம்	2017 ரூபா	2018 ரூபா
ஆளுக்கான வேதனாதிகள்	132,776,383	146,420,195
பிரயாணச் செலவு	13,687,370	7,669,559
வழங்கல்கள்	10,135,025	9,167,917
பராமரிப்பு செலவுகள்	4,583,772	4,835,600
ஒப்பந்த சேவைகள்	26,666,427	29,966,114
ஏனைய மீண்டுவரும் செலவினங்கள்	95,070,362	101,134,012
பட்டப்பின் படிப்பு பயிற்சி செலவு	53,957,101	67,086,812
மொத்தம்	**336,876,440**	**366,280,209**

11. மூலதனச் செலவினங்கள் பற்றிய விபரங்கள்

விடயம்	2017 ரூபா	2018 ரூபா
தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல்	21,923,842	9,486,355
ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் கையகப்படுத்தல்	124,000	1,755,000
நூல்கள், சஞ்சிகைகள் கொள்வனவு	3,080,094	6,273,328
கட்டிடங்கள்	196,607,994	-
ஏனையவை(Cloaks)	-	132,500
ஏனையவை (மின்சாரம் வழங்கல்)	-	-
மொத்தம்	**221,735,930**	**17,647,183**

12. நிதி சார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (செலவீனங்கள்) (ரூ.)

விடயம்	அரச மானியம் 2018	ஈட்டிய வருமானம் 2018	செலவு 2018
மீண்டுவரும் செலவினத் திட்டங்கள்	120,000,000	324,988,851	366,280,209
மூலதனச் செலவினத் திட்டங்கள்	412,000,000	-	425,612,677
மொத்தம்	**532,000,000**	**324,988,851**	**791,892,886**

13. நிதி சார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (ஈட்டிய வருமானம்) (ரூ.)

வருமான மூலம்	நிதி ஏற்பாடு 2018	ஈட்டிய தொகை 2018	பற்றாக்குறை / மேலதிகம்
பட்டப்பின் படிப்பு	244,700,000	296,964,122	(52,264,122)
ஏனையவை	7,650,000	28,024,729	(20,374,729)
மொத்தம்	**252,350,000**	**324,988,851**	

14. நிதி செயற்திறன் பகுப்பாய்வு - 2017

விடயம்	சூத்திரம்	மாணவரொருவருக்கான செலவு (ரூ)
மாணவரொருவருக்கான மீண்டுவரும் செலவினம்	மீண்டுவரும் செலவினம் / மாணவர் எண்ணிக்கை	93,773.73
மாணவரொருவருக்கான மூலதனச் செலவினம்	மூலதனச் செலவினம்/ மாணவர் எண்ணிக்கை	108,963.82

15. 2018 இல் பெ

றப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரங்கள்

உட்கட்டமைப்பு வசதிகள் விபரங்கள்	**செலவீனங்கள் (ரூ.)**	**பௌதீக முன்னேற்றம்**
ம.ப.பி.ப.நிறுவகத்தின் தள அமைப்புக்களை பிரித்து அமைத்தல் பணிகள்	73,800.00	நிறைவு செய்யப்பட்டுள்ளது
ம.ப.பி.ப.நிறுவகத்தின் வடக்குப்புறக் கட்டிடத்தின் உட்கூரை பழுதுபார்ப்பு	40,000.00	நிறைவு செய்யப்பட்டுள்ளது
ம.ப.பி.ப.நிறுவகத்தின் கட்டிடச் சுவர்களுக்கு வர்ணம் பூசுதல்	57,380.00	நிறைவு செய்யப்பட்டுள்ளது
ம.ப.பி.ப.நிறுவகத்தின் லிப்ட் இருக்கும் பகுதிகள் மற்றும் நிறம் குறைவடைந்துள்ள பகுதிகளுக்கு வர்ணம் பூசுதல்	154,800.00	நிறைவு செய்யப்பட்டுள்ளது
ம.ப.பி.ப.நிறுவகத்தின் நுழைவாயிலுக்கான ஸ்லைட் கேட்டினை தூணுடன் பொருத்துதல்	23,634.00	நிறைவு செய்யப்பட்டுள்ளது

16. ஏனைய தகவல்கள்

16.1 கல்விசார் நடவடிக்கைகள்

16.1.1. பதிவுகள்

2018 ஆம் ஆண்டில் மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவகம் 23 கற்கை சபைகள் மற்றும் 35 நிபுணத்துவ சபைகளின் நேரடி மேற்பார்வையின் கீழ் எம். டீ, எம். எஸ்.சீ, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் சான்றிதழ் போன்ற துறைகளில் 124 பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை நடாத்தியது

எம். டி, எம்.எஸ்.சீ, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, சான்றிதழ் தகுதிச் சான்றிதழ் போன்ற துறைகளில் பட்டப் பாடநெறிகளுக்கான பயிற்சித் திட்டத்தில் 1007 புதிய பயிற்சியாளர்கள் உட்பட மொத்தம் 3921 பட்டப்பின் படிப்பு பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களிடையே உள்நாட்டில் 3639 பேர் பயிற்சி பெறுவதுடன், 456 மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

16.1.2. கல்விசார் முக்கியத்துவம்

2018 ஆம் ஆண்டின் கல்விசார் தாற்பரியமானது புதிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாடவிதானங்களுடன் தர மதிப்பீட்டு அளவையிடலும், புதிய உத்திகளை உள்வாங்கி தற்போது நிலவும் பயிற்சியளிப்புத் திட்டங்கள் மற்றும் பாட விதானங்களை திருத்தியமைத்துக் கொள்வதன் ஊடாக அவற்றின் தரத்தை மேம்படுத்திக் கொள்வதன் மீது கவனம் செலுத்தியுள்ளது.

இந்த ஆண்டிலும் ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், இந்தியா, ஐக்கிய அமெரிக்க குடியரசு, பாகிஸ்தான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் சிறப்பு மையங்களில் நடாத்தப்படும் எம்.டி. பட்டப் பரீட்சைகளின் வெளிவாரி பரீட்சையாளர்களின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை

அடிப்படையாகக் கொண்டு பயிற்சியாளர்கள் மற்றும் பரீட்சை விடைத் தாள்களை மதிப்பீடு செய்பவர்களை புதிய நுட்பங்களினால் பலப்படுத்துவதற்குப் போன்றே பரீட்சை மாதிரிப் படிவங்களின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் பயிற்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகளின் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களைப் பேணுவதற்கு அவர்களுக்கு பொருத்தமான தலைப்புக்களின் கீழ் செயலமர்வுத் தொடரொன்று நடாத்தப்பட்டது.

புதிய பயிற்சித் திட்டங்கள்

2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கீழுள்ள பயிற்சித் திட்டங்களுக்காக விடயத் தொகுப்பை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- உறுப்புக்கள் மாற்று உணர்விழப்பியல் மற்றும் தீவிர நிலைமை சிகிச்சை சம்பந்தமாக விசேட கவனத்துடனான உணர்விழப்பியல் சம்பந்தமான சபை சான்றளிப்பு.

2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் புதிய பயிற்சித் திட்டங்களுக்கான பட்டம் தொடர்பான விடயத் தொகுப்பை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இராணுவ மருத்துவ எம் எஸ் சி பட்டம்
- ஆய்வுகூட மூலக்கூற்று மருத்துவ எம் டி பட்டம்

நிலவும் திட்டங்களில் கீழ் குறிப்பிடப்படும் பாடத்திட்டங்கள் மற்றும் பட்டம் தொடர்பான விடயத்தொகுப்பு இந்த ஆண்டினுள் திருத்தியமைக்கப்பட்டது.

- மருத்துவக் கல்வி எம் டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்

- பிளாஸ்டிக் மற்றும் சீரமைப்பு சத்திர சிகிச்சை சபை சான்றிதழ்
- நரம்பியல் சத்திர சிகிச்சை சபை சான்றிதழ்
- சிறுநீரகவியல் சபை சான்றிதழ்
- சிறுநீரக சத்திர சிகிச்சை சபை சான்றிதழ்
- தடயவியல் மருத்துவம் எம் டி
- முதியோர் தொடர்பான மருத்துவம் (Elderly Medicine) பற்றிய பட்டப்பின் படிப்பு (தற்போது மூப்பியல் பற்றிய மருத்துவம் (Geriatric Medicine) என மீளப் பெயரிடப்பட்டுள்ளது)

பின்வருவன தொடர்பாக மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

- மருத்துவ நிர்வாகம் சம்பந்தமான எம் டி பட்டம் (AAAEC அங்கீகாரத்துடன், முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது.)
- புற்று நோயியல் சம்பந்தமான எம் டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
- மருத்துவ நுண்ணுயிரியல் சம்பந்தமான எம் டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
- மரபியல் மருத்துவம் சம்பந்தமான சபை சான்றிதழ்
- மருத்துவ நிர்வாகம் சம்பந்தமான எம் எஸ் சீ பட்டம்
- உடற்கூற்றியல் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
- உடலியல் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
- பொதுவான பல் மருத்துவம் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

16.1.3. பட்டப்பின் படிப்பு பயிற்சியாளருக்கான பொது ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டல்கள்

2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பட்டப்பின் படிப்பு பயிலுனர்களுக்கான பொது ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் சம்பந்தமான ஆவணத்தை 2019 ஜனவரியிலிருந்து நடைமுறைப்படுத்த முடியுமான வகையில் 2018 இல் முகாமைத்துவ சபை / மூதவையால் (செனட்) எடுக்கப்பட்ட தீர்மானங்களை உள்ளடக்கிய வகையில் திருத்தியமைக்கப்பட்டது.

16.1.4. பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பரீட்சை மதிப்பீட்டாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பொது ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டல்கள்

பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பரீட்சை மதிப்பீட்டாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பொது ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் சம்பந்தமாக 2016 இல் வெளியிடப்பட்ட ஆவணம் 2019 ஜனவரியிலிருந்து நடைமுறைப்படுத்த முடியுமான வகையில் 2018 இல் முகாமைத்துவ சபை / மூதவையால் (செனட்) எடுக்கப்பட்ட தீர்மானங்களை உள்ளடக்கிய வகையில் திருத்தியமைக்கப்பட்டது.

அட்டவணை – 01

மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்படும் கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் - 2018

உணர்விழப்பியல்	உணர்விழப்பியல் பற்றிய திறன் சான்றிதழ்
	பட்டப்பின் படிப்பு டிப்ளோமா தீவிர பராமரிப்பு மருத்துவம்
	உணர்விழப்பியல் எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	உணர்விழப்பியல் எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழுடனான சிறப்புப் பயிற்சி
	இருதயம் தொடர்பான உணர்விழப்பியல்
	நரம்பியல் தொடர்பான உணர்விழப்பியல்
	மகப்பேற்று உணர்விழப்பியல்
	குழந்தை சிகிச்சை உணர்விழப்பியல்
	அதிதீவிர கவனிப்பு உணர்விழப்பியல்
	நோவு முகாமை உணர்விழப்பியல்
	உறுப்பு மாற்றல் மற்றும் அதிதீவிர கவனிப்பு
	அதிதீவிர கவனிப்பு மருத்துவம் தொடர்பான சபை சான்றிதழ்
அடிப்படை மருத்துவ விஞ்ஞானங்கள்	உடல் உட்கூறு அமைப்பு பற்றிய பட்டப்பின் டிப்ளோமா
	உடற்றொழிலியலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
சமூக மருத்துவம் மற்றும் சமூக பல் மருத்துவம்	சமூக மருத்துவத்தில் எம்.எஸ்.சி பட்டம்
	சமூக பல் மருத்துவத்தில் எம்.எஸ்.சி பட்டம்
	சமூக மருத்துவத்தில் எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	சமூக பல் மருத்துவத்தில் எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	மானிட ஊட்டச்சத்து பற்றிய எம்.எஸ்.சி பட்டம
புற்றுநோயியல்	நோய்க்குறி நீக்கல் பட்டப்பின் டிப்ளோமா
	புற்றுநோய் சிகிச்சையியல் எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	துணை சிறப்புக்கள் சபை சான்றிதழ்
	குழந்தை புற்றுநோய் சிகிச்சையியல்
	இரத்தப் புற்றுநோயியல்
பல் சத்திரசிகிச்சையியல்	மருத்துவமனை பல் சிகிச்சை நடைமுறை பற்றிய பட்டப்பின் டிப்ளோமா
	வாய் மற்றும் முழுமுக சத்திர சிகிச்சையில் எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	பல் அமைவுஇயல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	பற்களை சீரமைத்தல் சிகிச்சையியல் எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	வாய் சார்ந்த நோயியல் எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
தோல் நோயியல்	தோல் நோயியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
குடும்ப மருத்துவ விஞ்ஞானம்	குடும்ப மருத்துவ விஞ்ஞானம் பற்றிய பட்டப்பின் டிப்ளோமா (முழு நேரம் - நேரடி விரிவுரை முறையில்)
	ஆய்வறிக்கை ஊடாக குடும்ப மருத்துவ பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	சிகிச்சையியல் பயிற்சி ஊடாக குடும்ப மருத்துவ பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
தடயவியல் மருத்துவம்	சட்ட மருத்துவம் பற்றிய பட்டப்பின் டிப்ளோமா
	தடயவியல் மருத்துவ விஞ்ஞானம் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	தடயவியல் மருத்துவம் பற்றிய சிறப்பு எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	சிகிச்சையளிப்பு தடயவியல் மருத்துவ விஞ்ஞானம்
	தடயவியல் நச்சுயியல்
	தடயவியல் குழந்தை சிகிச்சை மற்றும் பிறப்பு சார்ந்த நோய்க்குறியியல்
	தடயவியல் திசுநோயியல்
	தடயவியல் மானுடவியல் விஞ்ஞானம்
	தடயவியல் கதிரியல்

மருத்துவ விஞ்ஞானம்	காச நோய் மற்றும் மார்பு நோய்கள் பற்றிய பட்டப்பின் டிப்ளோமா
	முதியோர் மருத்துவம் பற்றிய பட்டப்பின் டிப்ளோமா
	பொது மருத்துவம் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	முதியோர் மருத்துவம் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	துணை சிறப்புக்கள் பற்றிய சபை சான்றிதழ்
	முதியோர் இதய நோயியல்
	இதய மின்னியல்
	ஓமோன்களின் தொழிற்பாட்டியல்
	உதரக்குடல் நோயியல்
	சிறுநீரகவியல்
	நரம்பியல்
	நரம்புமண்டல உடற்தொழில்பாட்டு நோயியல்
	சுவாச மருத்துவ விஞ்ஞானம்
	வாதவியல் மற்றும் புனர்வாழ்வு
	புனர்வாழ்வு மருத்துவம்
மருத்துவ நிர்வாகம்	மருத்துவ நிர்வாகம் பற்றிய எம்.எஸ்.சி பட்டம்
	மருத்துவ நிர்வாகம் பற்றிய எம்.டி. பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
நுண்ணுயிரியல்	மருத்துவ நுண்ணுயிரியல் பற்றிய பட்டப் பின் படிப்பு டிப்ளோமா
	மருத்துவ நுண்ணுயிரியல் பற்றிய எம்.டி. பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	துணை சிறப்புக்கள் பற்றிய சபை சான்றிதழ்
	பங்கஸ் ஆய்வியல்
	ஒட்டுண்ணியியல் பற்றிய எம்.டி பட்டம் சபை சான்றிதழ்
	வைரஸ் ஆய்வியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
பன்முகத் துறைக் கல்விப் பாடநெறிகள்	மருத்துவக் கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழ்
	சுகாதாரத்துறை ஆபத்து முகாமைத்துவம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	மருத்துவ நச்சுயியல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	உயிரியல் தகவலியல் பற்றிய எம்.எஸ்.சி பட்டம்
	மூலக்கூற்று மருத்துவம் பற்றிய பட்டப்பின் டிப்ளோமா மற்றும் எம்.எஸ்.சி பட்டம்
	மனித ஊட்டச்சத்து பற்றிய எம்.எஸ்.சி பட்டம்
	சிகிச்சை மருந்தியல் மற்றும் பிசியோதெரபி பற்றிய எம்.எஸ்.சி பட்டம்
	மருத்துவ நச்சுயியல் பற்றிய முதுமாணிப் பட்டம்
	அவசர நிலைமை மருத்துவ விஞ்ஞானம் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	மருத்துவக் கல்வி பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	உடல் நல தகவல்துறை பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	சிகிச்சை மருந்தியல் மற்றும் பிசியோதெரபி பற்றிய சபை சான்றிதழ்
	ஊட்டச்சத்து சிகிச்சையியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று மருத்துவம்	இனப்பெருக்கச் சுகாதாரம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	பெண் நோயியல் மற்றும் மகப்பேறு பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	துணை சிறப்புக்கள் பற்றிய சபை சான்றிதழ்
	பெண்நோய் புற்றுநோயியல்
	குறைந்த கருவளம் சிகிச்சையியல்
	பெண்நோய் சிறுநீரகவியல் (காத்திருப்பு)
கண்நோயியல்	கண்நோயியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	துணை சிறப்புக்கள் பற்றிய சபை சான்றிதழ்
	விழித்திரை சத்திர சிகிச்சை
	குழந்தை கண்நோயியல்

	பொது கண்நோயியல் சிறப்புப் பயிற்சி
	விழித்திரை மற்றும் வெளியக கண்நேய்கள்
	கண் சுற்றுவட்டம் மற்றும் கண்ணைச் சுற்றி மேற்கொள்ளப்படும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை (Orbit & Oculoplasty)
காது நோயியல்	காது நோயியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
குழந்தை நோயியல்	குழந்தை நலம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	குழந்தை சிகிச்சையியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	துணை சிறப்புக்கள் பற்றிய சபை சான்றிதழ்
	குழந்தை மருத்துவவியல் மற்றும் பிறப்பு சார்ந்த மருத்துவம்
	குழந்தை இதய நோயியல்
	குழந்தை சிறுநீரக நோயியல்
	குழந்தை நரம்பு நோயியல்
	குழந்தை அதி தீவிர கவனிப்பு
	குழந்தை நாளமில்லா சுரப்பியியல்
	குழந்தை நுரையீரல் நோயியல்
	குழந்தை சமூக நோயியல்
நோய்க்குறியியல்	அடிப்படை ஆய்வுகூட விஞ்ஞானம் பற்றிய பட்டப்பின் சான்றிதழ்
	உடலுறுப்பு மாற்று மருத்துவம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	இரத்தவியல் சிகிச்சையியல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	திசுத்துரியியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	இரசாயன நோயியல் பற்றிய எம்.டி பட்டம்
	இரத்தவியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	உடலுறுப்பு மாற்று மருத்துவம் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
மனநல மருத்துவம்	மன நலம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	மன நலம் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	துணை சிறப்புக்கள் பற்றிய சபை சான்றிதழ்
	தடயவியல் மன நல மருத்துவம்
	குழந்தை மற்றும் பருவ வயது மன நல மருத்துவம்
	வயோதிபர்களுக்கான மன நல மருத்துவம்
	அடிமையாதலுடன் தொடர்பான மன நல மருத்துவம்
கதிரியக்கவியல்	பொது கதிரியக்கவியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	துணை சிறப்புக்கள் பற்றிய சபை சான்றிதழ்
	குழந்தை மருத்துவ கதிரியக்கவியல்
	நரம்பியல் கதிரியக்கவியல்
	தலையீட்டு கதிரியக்கவியல் (Interventional Radiology)
விளையாட்டுத்துறை மருத்துவம்	விளையாட்டுத்துறை மருத்துவம் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	விளையாட்டுத்துறை மற்றும் உடற் பயிற்சி மருத்துவம் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
அறுவைச் சிகிச்சையியல்	அறுவைச் சிகிச்சையியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
	விசேட ஆர்வம் காட்டும் பொதுவான அறுவைச் சிகிச்சையியல்
	மேல் உதரக்குடல் சத்திரசிகிச்சை
	H.P.B (ஈரல் - சதையி - பித்தப்பை) தொடர்பான சத்திர சிகிச்சை
	கீழ் உதரக்குடல் சத்திரசிகிச்சை
	இரத்த நாள அறுவைச் சிகிச்சை
	மார்பக அறுவைச் சிகிச்சை
	நாளமற்ற அறுவைச் சிகிச்சை
	படுகாயம் தொடர்பான அறுவைச் சிகிச்சை

	துணை சிறப்புக்கள் பற்றிய சபை சான்றிதழ்
	புற்றுநோய் அறுவை சிகிச்சை
	இருதயம் தொடர்பான அறுவைச் சிகிச்சை
	உதரக்குடல் அறுவைச் சிகிச்சை
	குழந்தை நோயியல் அறுவைச் சிகிச்சை
	பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை
	பிறப்பு உறுப்பு நீருறுப்பு அறுவைச் சிகிச்சை
	இரத்த நாள அறுவைச் சிகிச்சை
	நரம்பியல் அறுவைச் சிகிச்சை
	நெஞ்சுக்கூடு சார்ந்த அறுவைச் சிகிச்சை
	எலும்பியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்
மேக நோயியல்	மேக நோயியல் பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா
	மேக நோயியல் பற்றிய எம்.டி பட்டம் மற்றும் சபை சான்றிதழ்

அட்டவணை - 02

2018. 12. 31 ஆம் திகதியன்று ஒவ்வொரு கல்வி சார் நிகழ்ச்சித் திட்டங்களின் பல்வேறு கட்டங்களுக்கான மொத்த பயிலுநர்களின் எண்ணிக்கை

கற்கைத் திட்டம்	புதிய பதிவுகள்	சேவைக்கால/ சான்றிதழ் /பகுதி I	ப.பி. டிப்ளோமா	எம்.எஸ்சி. பட்டம்	ஆரம்ப எம்.டி பட்டம்	ப.பி. எம்.டி (உள்நாட்டு)	வெளிநாட்டு		மீள் வருகை 2018
							02 வருடங்கள் வரை	03 வருடங்கள்	சபையால் உறுதிப்படுத்தப்பட்ட
							(a)	(b)	(c)
		1		2	3	4	5		
ப.பி.மருத்துவ கல்வியியல் சான்றிதழ்	13	13							
நோயியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	2019 இல் ஆரம்பிக்கப்படும் கற்கை திட்டங்கள்								
தீவிர சிகிச்சை மருத்துவம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	14		34						
குழந்தை சுகாதாரம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	18		18						
முதியோர் மருத்துவம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	18		37						
குடும்ப மருத்துவம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	51		101						
சுகாதாரப் பிரிவு அனர்த்த முகாமைத்துவம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	14		37						
மருத்துவமனை பற் சிகிச்சை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	32		58						
இரத்தவியல் (நோய்க்குறியியல்) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	11		42						
திசுத்துயரியல் (நோய்க்குறியியல்) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா			10						
வேதியியல் (நோய்க்குறியியல்) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா			5						
சட்ட மருத்துவம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா			15						
மருத்துவ நுண்ணுயிரியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	15		29						
மூலக்கூறு மருத்துவப் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா			12						
நோய்க் குறியியல் நிவாரண பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	15		15						
உடற்றொழிலியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	10		10						
மன நல சிகிச்சை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	15		36						
இனப்பெருக்க சுகாதாரம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா			6						
விளையாட்டுத்துறை மருத்துவம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	15		15						
காசநோய் மற்றும் மார்பு நோய்கள் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	41		89						
குருதி மாற்றல் மருத்துவம் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	8		23						
மேகநோயியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	6		18						
உயிரியல் மருத்துவ தகவல் பற்றிய எம்.எஸ்.சி பட்டம்	16			75					
சமூக பற் சிகிச்சை பற்றிய எம்.எஸ்.சி பட்டம்	4			4					
சமூக மருத்துவம் பற்றிய எம்.எஸ்.சி பட்டம்	48			48					

மருந்தியல் சிகிச்சையியல் மற்றும் பிசியோதெரப்பி பற்றிய எம்.எஸ்.சி பட்டம				13					
மானிட ஊட்டச்சத்து பற்றிய எம்.எஸ்.சி பட்டம்	31			54					
மருத்துவ நிர்வாகம் பற்றிய எம்.எஸ்.சி பட்டம்	31			57					
மூலக்கூற்று மருத்துவம் பற்றிய எம்.எஸ்.சி பட்டம்	இறுதித் தொகுதியினரை பதிவு செய்தல் 07.05.2015- 06.06.2016 இற்கிடையில் மேற்கொள்ளப்பட்டது.								
மருத்துவ நச்சுயியல் பற்றிய எம்.எஸ்.சி பட்டம்				35					
சேவைக்கால புற்றுநோய் சிகிச்சையியல்	5	8							
இரசாயன நோய்க்குறியியல் பற்றிய எம்.டி பட்டம் - பகுதி 1	8	32							
திசுத் துயரியல் பற்றிய எம்.டி பட்டம் - பகுதி 1	14	55							
மருத்துவ நிர்வாகம் பற்றிய எம்.டி பட்டம் - பகுதி 1	29	29							
கண் நோயியல் பற்றிய எம்.டி. பட்டம் - பகுதி 1	14	19							
உணர்விழப்பியல் பற்றிய எம்.டி பட்டம்	40				134	56	34	3	4
இரசாயன நோய்க்குறியியல் பற்றிய எம்.டி பட்டம்					3	3	4	1	
புற்றுநோய் சிகிச்சையியல் பற்றிய எம்.டி. பட்டம்	3				21	6	6	1	1
ஊட்டச்சத்து சிகிச்சையியல் பற்றிய எம்.டி. பட்டம	19				25	0			
சமூக பற் சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம்	4				17	2			2
சமூக மருத்துவம் பற்றிய எம்.டி. பட்டம்	24				95	12	23	1	7
தோல் நோயியல் பற்றிய எம்.டி. பட்டம்	5				18	11	13	1	1
அவசர மருத்துவம் பற்றிய எம்.டி. பட்டம்	32				83	29	20		
குடும்ப மருத்துவம் பற்றிய எம்.டி. பட்டம்	5				11	6	6	1	1
தடயவியல் மருத்துவம் பற்றிய எம்.டி. பட்டம்	8				27	11	6	1	2
முதியோர் மருத்துவ எம்.டி.பட்டம்	4				2	0			
இரத்தவியல் சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம்					8	18	18	3	
உடல்நல தகவலியல் பற்றிய எம்.டி. பட்டம்	13				23	0			
திசுத்துயரியல் பற்றிய எம்.டி. பட்டம்					8	11	3	2	1
மருத்துவக் கல்வி பற்றிய எம்.டி. பட்டம்					2	2			
மருத்துவ நிர்வாகம் பற்றிய எம்.டி. பட்டம்	21				48	13	8		
மருத்துவ நுண்ணுயிரியல் பற்றிய எம்.டி. பட்டம்	7				23	15	4		2
மருத்துவ ஒட்டுண்ணியியல் பற்றிய எம்.டி. பட்டம					2	0	1		
மருத்துவவியல் பற்றிய எம்.டி. பட்டம்	102				282	205	70	8	13
பெண் நோயியல் மற்றும் மகப்பேறியல் பற்றிய எம்.டி. பட்டம்	25				91	19	24		2
O.M.F அறுவை சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம்	7				18	8	4	1	1
கண் நோயியல் பற்றிய எம்.டி. பட்டம்	14				33	19	15	1	
வாய் தொடர்பான நோயியல் பற்றிய எம்.டி. பட்டம்					1	0			
சீரற்ற பற்களை சீர் செய்தல் சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம்	4				8	6	4		1
வாய் சார்ந்த அறுவை சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம்	வாய் சார்ந்த அறுவை சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டமானது O.M.F அறுவை சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.								
எலும்பியல் அறுவை சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம்	12				32	18	7	1	7

காது, மூக்கு, குரல்வளை நோயியல் பற்றிய எம்.டி. பட்டம்	5				20	5	2		
குழந்தை நோயியல் பற்றிய எம்.டி. பட்டம்	48				142	44	37	7	1
உள மருத்துவம் பற்றிய எம்.டி. பட்டம்	21				67	20	24	4	3
கதிரியக்கவியல் பற்றிய எம்.டி. பட்டம்	15				86	31	21	1	2
பல் புனரமைப்பு சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம்	7				11	7	5		2
விளையாட்டுத்துறை மற்றும் உடற்பயிற்சி மருத்துவம் பற்றிய எம்.டி. பட்டம்	8				8	0			
அறுவைச் சிகிச்சை பற்றிய எம்.டி. பட்டம்	42				151	74	44	6	7
குருதி மாற்றுதல் மருத்துவம் பற்றிய எம்.டி. பட்டம்	8				21	6	3		
மேக நோயியல் பற்றிய எம்.டி. பட்டம்	6				21	13	5	2	
வைரஸ் ஆய்வியல் பற்றிய எம்.டி. பட்டம்	2				4	2			
மொத்தம்	**1007**	**156**	**610**	**286**	**1546**	**672**	**411**	**45**	**60**

குறிப்பு:

(அ): 2018.12.31 ஆம் திகதியன்று 2 வருட கால வெளிநாட்டு பயிற்சிகளைப் பெறுபவர்கள்

(ஆ): 2018.12.31 ஆம் திகதியன்று 3 வருட கால வெளிநாட்டு பயிற்சிகளைப் பெறுபவர்கள்

(இ): 2018 ஆம் ஆண்டாகும்போது மீளத் திரும்பி சபை சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பயிலுநர்கள்

(ஈ): 2018 ஆம் ஆண்டாகும்போது மீளத் திரும்பி சபை சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவிருக்கும் பயிலுநர்கள்

16.1. (அ) மருத்துவக் கல்வி வள நிலையம் (MERC)

2018 ஆம் ஆண்டு மருத்துவ கல்வி வள நிலையத்திற்கு மற்றுமொரு வெற்றிகரமான ஆண்டாக இருந்ததுடன் இது மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பல நடவடிக்கைகளில் தலைமை வகிக்கும் சந்தர்ப்பம் மருத்துவ கல்வி வள நிலையத்திற்கு கிடைத்தது.

கல்விசார் செயற்பாடுகள்

ம.க.மூ. நிலையத்தினால் (MERC) ஒருங்கிணைக்கப்படும் பாடநெறிகள்
பல்வேறு கல்விசார் துறைகள் சம்பந்தமான கற்கை சபைகள்

1. **மருத்துவ கல்வி சம்பந்தமான பட்டப்பின் படிப்பு சான்றிதழ் பாடநெறி, மருத்துவ கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் மருத்துவ கல்வி சம்பந்தமான எம்.டி. பட்டம்:**

   மருத்துவ கல்வி பட்டப்பின் படிப்பு சான்றிதழ் என்றால் மருத்துவ கல்வி பற்றிய பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி வரை கற்க முடியுமான பத்து மாத கால பகுதி நேர பாட நெறியாகும்.

   2018 ஆம் ஆண்டில் 13 பயிலுநர்கள் மருத்துவக் கல்வி பற்றிய பட்டப்பின் சான்றிதழ் பாடநெறியில் இணைந்து கொண்டனர். 2017 ஆம் ஆண்டில் இரண்டு பேர் மருத்துவக் கல்வி பற்றிய எம்.டி பயிற்சி நெறியில் இணைந்து கொண்டதுடன் ஆரம்ப எம்.டி.பயிலுனர்களாக இருப்பதுடன் இரண்டு பயிலுநர்கள் தமது வெளிநாட்டு பட்டப்பின் எம்.டி. பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

2. **மருத்துவ நச்சுயியல் எம்.எஸ்.சி பட்டம் :** இது இணைய வழியைப் பயன்படுத்தி (online plat form) பயன்பாட்டில் Moodle முகாமைத்துவ முறைமை மூலம் மேற்கொள்ளப்படும் இரண்டு வருட தொலைக் கல்வித் திட்டமாகும். 09 உள்நாட்டுப் பயிலுனர்கள் மற்றும் 14 வெளிநாட்டுப் பயிலுனர்கள் மருத்துவ நச்சுயியல் பற்றிய எம்.எஸ்.சி. பட்டத்தைப் பயிலுகின்றனர்.

2018 இல் மருத்துவ கல்வி வள நிலையத்தினால் பயிலுனர்களுக்காக நடாத்தப்பட்ட செயலமர்வுகள்

2018 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி முறைகள் சம்பந்தமாக கீழுள்ள செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

1. **ஆராய்ச்சி முறைகள் பற்றிய செயலமர்வு**
   (அ) 2018 பெப்வரி 19 மற்றும் 18, ஏப்ரல் 24, மே 14, 21 மற்றும் 28 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 48
   (ஆ) 2018 ஜுலை 16 - 21 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 70
   (இ) 2018 ஒக்டோபர் 15 - 20 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 38

2. மருத்துவத் தொழிலில் ஈடுபடும்போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் மற்றும் தொழில் முறை தொடர்பான எம்.டி. பயிலுநர்களுக்கான செயலமர்வு
   (அ) 2018 மே 18, 19, 25 மற்றும் 26, - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 102
   (ஆ) 2018 ஆகஸ்ட் 31, செப்டெம்பர் 1,7,8 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 110
   (இ) 2018 செப். 1,7,8 பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 67
   (ஈ) 2018 நவம்பர் 16,17,23 24 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 88

3. கதிரியக்கவியலுடன் 20 தொடர்பான அறிக்கைகளை தயாரிக்கும் செயலமர்வு
   2018 பெப். 25 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 63

4. EMQ மற்றும் SBA சிக்கல்கள் தொடர்பாக அணுகுவதெப்படி என்பது சம்பந்தமான செயலமர்வு - நோய்குறியியல்
   2018 ஆகஸ்ட் 13 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 35

5. ஆராய்ச்சி முன்மொழிவுகளை தயாரித்தல் தொடர்பான செயலமர்வு - மேக நோயியல்
   2018 செப். 17 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 07

6. உங்களுடைய கட்டுரைகளை பிரசுரிப்பதெப்படி என்பது சம்பந்தமான பங்கேற்பு இடைச் செயற்பாட்டு செயலமர்வு
   2018 நவம்பர் 7 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 25

7. ஆராய்ச்சி உதவி நிலையங்களின் மாதாந்த ஆராய்ச்சிக் கூட்டங்கள்

	திகதி	தலைப்பு	வளவாளர்
1	2018 ஜனவரி 25	இயலளவைக் கட்டியெழுப்புதல்	கலாநிதி மாதவ சந்திரதிலக்க
2	2018 பெப்ரவரி 22	முறையான அவதானிப்புக்கள் மற்றும் 'மேட்டா' பகுப்பாய்வுகளை வரைவிலக்கணப்படுத்துவதெப்படி? சுருக்க வழிகாட்டியொன்று	கலாநிதி பீ குமரேந்திரன்
3	2018 மே 24	புதிய நெறிமுறைகள் விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதெப்படி?	கலாநிதி அச்சல ஜயதிலக்க
4	2018 ஜூன் 28	ஆராய்ச்சி முன்மொழிவொன்றை எழுதுதல்	கலாநிதி தில்ஷானி திசாநாயக்க
5	2018 ஆகஸ்ட் 30	கருத்துத் திருட்டை தவிர்த்தல் மற்றும் உங்களுடைய ஆராய்ச்சியின் அசல்தன்மையை காண்பித்தல்	கலாநிதி அசேல ஒலுபெலியாவ
6	2018 செப்டெம்பர் 27	கைப் பிரதியொன்றை தயாரிப்பதெப்படி?	பேராசிரியர் உப்புல் சேனரத்
7	2018 ஒக்டோபர் 25	உங்களுடைய தரவுகளை பயன்மிக்க வகையில் முன்னிலைப்படுத்தல்	பேராசிரியர் ஏ பத்மேஷ்வரன்
8	2018 நவம்பர் 29	உங்களுடைய விண்ணப்பத்தை ERC/PGIM இற்கு சமர்ப்பிக்கும் விதம் சம்பந்தமான பங்கேற்பு வழிகாட்டி	கலாநிதி ஹிமானி மொல்லிகொட

2018 ஆம் ஆண்டில் மருத்துவ கல்வி வள நிலையத்தினால் (MERC) பயிற்றுவிப்பாளர்களுக்காக நடாத்தப்பட்ட செயலமர்வுகள்

2018 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. அது தவிர கற்கை சபைகளின் வேண்டுகோளுக்கிணங்க மேலதிக செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

1. ஆய்வு முறை பயிற்சித் திட்டங்கள் - 2018 பெப்ரவரி 02 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை 25.

2. பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்
   அ. 2018 பெப்ரவரி 14, 15 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 21.
   ஆ. 2018 ஜூன் 21, 28 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 24.

இ. 2018 ஆகஸ்ட் 09, 10 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 30.
ஈ. 2018 டிசம்பர் 05, 06 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 27.

3. மதிப்பீட்டாளர்களுக்கான (பரிசோதகர்களுக்கான) பயிற்சித் திட்டங்கள்

அ. 2018 ஜனவரி 17, 23 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 57.

ஆ. 2018 மே 02, 09 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 59.

இ. 2018 ஜூலை 04, 11 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 71.

ஈ. 2018 செப். 12, 19 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 41.

4. இரத்தவியல் மற்றும் உறுப்பு மாற்று மருத்துவத்திற்கான மதிப்பீட்டாளர் பயிற்சி அமர்வு - 2018 பெப்ரவரி 22 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 40.
5. 'ஏற்றுக்கொள்ளப்பட்ட அலுவல் நடைமுறை' சம்பந்தமான பயிற்சித் திட்டம் - 2018 மே 28 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 8
6. நோய்க் குறியியல் சம்பந்தமான செயலமர்வு 'பரீட்சை வினாத்தாள்களை தயாரித்தல்' - 2018 ஜூன் 8 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 30
7. 'போர்ட்போலியோ மதிப்பீடு' சம்பந்தமான பயிற்றுவிப்பாளர்களுக்கான செயலமர்வு - 2018 ஜூலை 31 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை 30.
8. மனநல சிகிச்சையளிப்பவர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு - 2018 செப்டெம்பர் 21 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை 40.
9. மனநல சிகிச்சை சம்பந்தமான எம்.டி பரீட்சைக்கான 'போர்ட்போலியோ மதிப்பீடு' சம்பந்தமான செயலமர்வு - ஒக்டோபபர் 15 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை 20.
10. எம்எஸ்சீ : பீஎம்ஐ (MSC:BMI) விடயப்பரப்பை தயாரிக்கும் செயலமர்வு - 2018 நவம்பர் 08 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை 17.
11. பெண் நோயியல் மற்றும் மகப்பேறு சம்பந்தமான பயிற்றுவிப்பாளர்களுக்கான ஆய்வு தினம் -
    2018 நவம்பர் 26 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை 17.
12. குற்றவியல் பொறுப்புக்கள் சம்பந்தமான மாநாடு - தடயவியல் மற்றும் சட்ட ரீதியான அடையாளம்
    2018 டிசம்பர் 12 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை 34
13. ''உணர்விழப்பியலின் சிகிச்சை கூறில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் சம்பந்தமான இறுதி எம்.டி பரீட்சை'' பற்றிய செயலமர்வு -
    2018 டிசம்பர் 19 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை 35.

2018 ஆம் ஆண்டில் மருத்துவ கல்வி வள நிலையத்தினால் (MERC) பயிற்றுவிப்பாளர்களுக்காக நடாத்தப்பட்ட செயலமர்வுகள்

1. பாலின சமத்துவம் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு - மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2018 ஜூலை 25 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 98

2018 இல் மருத்துவ கல்வி வள நிலையத்தினால் (MERC) ஏற்பாடு செய்யப்பட்ட ஏனைய செயலமர்வுகள்

1. ERC செயலமர்வு - 2018 ஆகஸ்ட் 05 - பங்குபற்றியோரின் எண்ணிக்கை - 35.

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் விஞ்ஞான சஞ்சிகை (JPGIM)

மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் சஞ்சிகையின் நிர்வாக மற்றும் பதிப்பு செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மருத்துவக் கல்வி வள நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. மருத்துவக் கல்வி பட்டப்பின் நிறுவகத்தின் சஞ்சிகையின் ஐந்தாவது தொகுதி 20 ஆக்கங்களுடன் வெளியிடப்பட்டது.

மருத்துவத் தொழிலாளர்களின் ஒழுக்க விதிகள் மீளாய்வுக் குழு (ERC/PIGM)

2018 ஆம் ஆண்டில் சமூக மருத்துவம் / பல் மருத்துவம், மருத்துவ நிர்வாகம், உயிரியல் மருத்துவத் தகவலியல், தீவிர கவனிப்பு மருத்துவம், இரத்தவியல் ஒன்கொலொஜி, புற்றுநோய் சிகிச்சையியல், சுகாதாரக் கல்வித் தகவலியல், மருத்துவத்துறை எம்.டி பட்டம், மேக நோயியல், சிகிச்சை மருந்தியல், மன நல மருத்துவவியல், அனர்த்த முகாமைத்துவம் பயிலுனர்களின் 163 விண்ணப்பங்கள் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மருத்துவத் தொழிலாளர்களின் ஒழுக்கவிதிகள் மீளாய்வுக் குழுவினால் பரீட்சிக்கப்பட்டது. குழுவின் ஆவணங்கள் நிர்வாக அலுவல்களுக்கான உதவிகள் மருத்துவக் கல்வி வள நிலையத்தினால் வழங்கப்படும்.

SIDCER-FERCAP கணக்கெடுப்பு 2018 ஆகஸ்ட் 09 முதல் 11 வரை மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் நடாத்தப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் மற்றும் முன்னணிக் கணக்கெடுப்பாளர்களாக இந்தியர்களான மருத்துவர் மேதா ஜோசி மற்றும் நந்தினி குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐக்கியப்படுதலுக்கான வழிகாட்டி, சிறப்பான சிகிச்சை பயன்பாட்டு அங்கீகாரங்கள் சம்பந்தமான சர்வதேச மன்றம், மருத்துவம் சம்பந்தமான சர்வதேச அமைப்புக்கள், சர்வதேச சுகாதார அமைப்புக்களின் தரங்கள், மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆராய்ச்சிகளின் நெறிமுறை மீளாய்வுக்கான செயற்பாட்டு வழிகாட்டி மற்றும் நெறிமுறை மீளாய்வு பயன்பாடுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் கணக்கெடுப்பு, EC/IRB அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு முறைகள் மற்றும் நெறிமுறை மீளாய்வுடன் தொடர்பான உள்நாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் அங்கீகாரங்கள் சம்பந்தமான ஹெல்சின்கி கூற்றுடன் இயைந்து செல்வதற்காக 2018 நவம்பர் 21 ஆம் திகதி தாய்வானில் நடைபெற்ற FERCAP இன் பொது மாநாட்டின் இடையில் வழங்கிய FERCAP அமைப்புடன் இணைந்து SIDCER இனால் பாராட்டைத் தெரிவித்தல் மருத்துத் தொழில் நெறிமுறை மீளாய்வுக் குழுவினால் (ERC/PGIM) ஏற்றுக்கொள்ளப்பட்டது. மருத்துத் தொழில் நெறிமுறை மீளாய்வுக் குழுவின் தலைவர் பேராசிரியர் திரு.வஜிர திசாநாயக்க அவர்கள் விருது வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டார்.

16.2. மதிப்பீடுகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான அலுவல்கள்

16.2.1. பரீட்சைகள்

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் 2018 ஆம் ஆண்டில் 41 எம். டி, 05 எம்.எஸ்.சி, 20 ப. பி. டிப்ளோமா, 04 ப.பி சான்றிதழ் பரீட்சைகள் மற்றும் 52 தெரிவுப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்கு 3115 பரீட்சார்த்திகள் தோற்றியதுடன் அவர்களில் 980 பரீடசார்த்திகள் சித்தி பெற்றுள்ளனர். அனைத்து எம்.டி பரீட்சைகளும் உள்நாட்டு பரீட்சார்த்திகளுக்கு மேலதிகமாக வெளிவாரி பரீட்சகர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டன. **(அட்டவணை 03)**

16.2.2. பட்டமளிப்பு வைபவம்

RECURRENT EXPENDITURE BY OBJECTS 2018 - NOTE 13

Expenditure 2017	Code	Description	Budget 2018	Total Expenditure	Pro-01-01 Gen.Admn.	Pro-01-02 Finan.Ad.	Pro 02-17 Eaxm & Acad.	Pro 03 Lib.Services
	4	**Personal Emoluments - Acadamic**						
8,041,528.38	4101	Salaries & Wages	10,000,000.00	8,278,374.88	3,209,297.10	-	3,314,012.35	1,755,065.43
1,891,722.88	4102	U.P.F	2,000,000.00	2,150,540.88	967,593.40	-	911,774.82	271,172.66
693,015.73	4103	Pension	800,000.00	614,869.47	158,059.85	-	146,898.05	309,911.57
521,347.48	4104	E.T.F	600,000.00	553,974.07	225,130.64	-	212,626.54	116,216.89
-	4105	E.P.F.	-	-		-	-	-
	4110	Other Allowance	-	-	-			
7,918,459.01	4115	Acadamic Allowance	9,700,000.00	9,998,746.47	4,149,572.91	-	3,930,539.04	1,918,634.52
16,044,329.92	4119	Visting Lectures Fees	13,000,000.00	14,476,618.26	929,100.00	-	13,547,518.26	-
847,432.26	4120	Cost of Living Allowance	1,000,000.00	597,442.86	265,460.00	-	133,640.00	198,342.86
45,548.13	4121	20% Special allowance	-	-	-	-	-	-
1,567,642.09	4122	Research Allowace	1,800,000.00	2,228,651.83	721,726.48	-	860,553.75	646,371.60
1,097,450.26	4123	Additional Allowance 20%	1,500,000.00	1,299,617.05	520,668.42	-	491,745.00	287,203.63

13,010.00	4126	MCA 35%	-		-			-
113,040.00	4127	Entertainment Allowance	250,000.00	185,190.00	185,190.00	-	-	-
280,325.57	4128	Adjustment Allowance	500,000.00	23,688.70	23,688.70	-		-
39,074,851.71			41,150,000.00	40,407,714.47	11,355,487.50	-	23,549,307.81	5,502,919.16
		Personal Emoluments - Non Acadamic						
43,313,314.30	4201	Salaries & Wages	51,000,000.00	49,058,541.05	12,935,586.94	7,084,962.83	23,045,212.23	5,992,779.05
5,998,775.97	4202	U.P.F	6,500,000.00	7,024,846.09	1,669,681.71	1,046,229.30	3,252,819.42	1,056,115.66
2,790,801.84	4203	Pension	3,145,000.00	3,440,695.95	1,057,678.08	382,962.95	1,639,822.49	360,232.43
1,779,057.85	4204	E.T.F	1,775,000.00	2,175,100.69	601,417.72	292,933.91	997,479.29	283,269.77
123,419.34	4205	E.P.F.	-	363,307.39	246,973.85	27,482.14	88,851.40	-
77,774.26	4206	Acting Pay	-	-	-	-	-	-
3,935,920.66	4208	Overtime	4,500,000.00	4,505,475.75	1,044,981.78	499,863.91	2,253,864.86	706,765.20
32,204.22	4209	Holiday Payments	40,000.00	35,427.80	4,641.00	22,337.00	8,449.80	-
211,138.34	4210	Other Allowance	75,000.00	1,916,857.63	730,653.92	221,200.00	955,415.00	9,588.71
-	4212	Gratiuity	3,000,000.00	-	-	-	-	-
10,480,029.39	4220	Cost of Living Allowance	10,500,000.00	10,219,386.27	2,671,223.23	1,310,970.33	4,833,444.32	1,403,748.39

10,298.08	4221	20% Special allowance	-	2,058.20	-	-	2,058.20	
361,333.00	4222	Research Allowance	1,100,000.00	1,312,146.07	384,893.25	445,020.45	482,232.37	-
5,696,957.08	4223	Additional Allowance 20%	5,000,000.00	7,184,060.71	1,848,906.99	985,142.99	3,356,545.21	993,465.52
369,501.63	4224	Property Loan Interest	-	336,590.61	95,540.93	122,274.45	118,775.23	
9,457,481.94	4226	MCA 35%	6,500,000.00	14,957,741.24	3,966,915.05	2,104,036.17	6,757,203.42	2,129,586.60
9,063,523.30	4228	Adjustment Allowance	2,500,000.00	3,480,244.78	937,643.58	376,034.00	1,647,878.55	518,688.65
93,701,531.20			95,635,000.00	106,012,480.23	28,196,738.03	14,921,450.43	49,440,051.79	13,454,239.98
132,776,382.91		**Sub Total**	**136,785,000.00**	**146,420,194.70**	**39,552,225.53**	**14,921,450.43**	**72,989,359.60**	**18,957,159.14**
		Traveling Subsistence						
12,128,328.33	501	Domestic	10,000,000.00	7,669,558.92	28,174.00	-	7,641,384.92	
1,559,042.00	502	Foreign (Sabbatical, seminars etc)	1,000,000.00	-	-	-	-	-
13,687,370.33		**Sub Total**	**11,000,000.00**	**7,669,558.92**	**28,174.00**	**-**	**7,641,384.92**	**-**
		Supplies						
6,826,305.52	601	Stationery & Office requisites	6,500,000.00	6,644,459.75	1,236,907.73	386,119.35	4,533,447.20	487,985.47
1,108,933.83	602	Fuel & Lubricants	1,250,000.00	1,427,788.91	1,422,788.91	-	5,000.00	-

196,456.50	603	Uniform & Tailoring charges	275,000.00	306,294.56	104,779.46	33,475.80	128,287.65	39,751.65
14,515.50	604	Mechanical & Electrical goods	150,000.00	142,604.25	142,604.25	-	-	-
1,268,191.25	605	Chemicals & Glassware	2,000,000.00	446,850.76	-	-	446,850.76	-
470,143.44	606	Medical Supplies	700,000.00	158,203.75	-	-	158,203.75	-
250,479.00	607	Other Supplies	300,000.00	41,715.00	30,815.00	9,400.00	1,500.00	-
10,135,025.04		Sub Total	11,175,000.00	9,167,916.98	2,937,895.35	428,995.15	5,273,289.36	527,737.12
		Maintenance & Expenditure						
1,042,416.99	701	Vehicles	1,500,000.00	1,291,766.22	1,291,766.22	-	-	-
2,756,346.00	702	Plant, Machinery & Equipment	3,500,000.00	2,353,189.48	2,127,402.48	74,800.00	93,995.52	56,991.48
643,054.74	703	Buildings & Structures	1,000,000.00	775,401.37	775,401.37	-	-	-
141,953.94	705	Others	800,000.00	415,242.75	415,242.75	-	-	-
4,583,771.67		**Sub Total**	**6,800,000.00**	**4,835,599.82**	**4,609,812.82**	**74,800.00**	**93,995.52**	**56,991.48**
		Contractual Services						
99,549.46	801	Transport	120,000.00	121,522.39	44,045.00	59,127.39	16,900.00	1,450.00
5,372,064.79	802	Telecommunication	5,600,000.00	6,773,758.12	6,419,802.04	61,559.66	229,030.69	63,365.73
866,813.80	803	Postal charges	900,000.00	758,349.42	29,369.00	199,664.00	515,176.42	14,140.00
6,885,868.75	804	Electricity	7,200,000.00	7,412,388.67	7,412,388.67	-	-	-

4,546,429.22	805	Security Services	4,800,000.00	4,514,553.78	4,514,553.78	-	-	-
656,077.37	806	Water	800,000.00	748,454.43	748,454.43	-	-	-
3,909,900.60	807	Cleaning Services	4,700,000.00	4,958,417.94	4,958,417.94	-	-	-
2,892,729.03	808	Rents & Hire Chages	3,000,000.00	3,549,972.64	3,549,972.64	-	-	-
30,000.00	809	Rates & Tax to Local Authority	600,000.00	30,000.00	30,000.00	-	-	-
773,672.75	810	Printing, Advertising Ect.	1,000,000.00	854,550.28	816,715.28	-	37,835.00	-
633,321.51	811	Others	1,500,000.00	244,146.28	105,235.00	13,071.28	33,590.00	92,250.00
26,666,427.28		**Sub Total**	**30,220,000.00**	**29,966,113.95**	**28,628,953.78**	**333,422.33**	**832,532.11**	**171,205.73**
		Other Recurrent Expenses						
53,957,100.63	901	Travel Grants to Univesity TE	72,500,000.00	67,086,812.30	-	-	67,086,812.30	-
10,563,360.00	902	Special Services-Council & Comm.	12,000,000.00	10,125,463.02	1,639,815.00	222,000.00	8,263,648.02	
45,000.00	903	Special Services-Professional	200,000.00	3,500.00	3,500.00	-	-	-
7,315,973.65	904	Workshops & Seminars	3,500,000.00	2,703,578.79	13,750.00	4,000.00	2,685,828.79	-
-	905	Academic Research	200,000.00	24,705.00	-	-	24,705.00	-
682,000.00	906	Staff Development	1,000,000.00	393,000.00	49,000.00	-	80,000.00	264,000.00
420,680.00	907	Interest Susidy on Property Loan	500,000.00	50,808.49				50,808.49

382,252.00	908	Holiday Warrant & Season tickets	475,000.00	701,590.00	624,630.00	22,560.00	48,390.00	6,010.00
3,778,754.91	909	Entertainment Expenses	4,500,000.00	4,430,759.31	246,263.00	32,705.00	4,149,256.31	2,535.00
4,668,681.67	910	Bank charges	5,500,000.00	6,661,744.25	-	45,039.70	6,616,704.55	-
124,600.00	911	Awards & Indemnities	200,000.00	293,400.00	293,400.00	-	-	-
	912	Student/ Employees Welfare	1,000,000.00	51,504.30		51,504.30	-	-
2,020,500.00	913	Convocation	3,000,000.00	3,047,250.00	-	-	3,047,250.00	-
60,645,929.70	914	Examination Expenses	61,000,000.00	66,707,503.27		-	66,707,503.27	-
4,422,630.25	915	Others-Newspapers,Magazines	5,500,000.00	5,939,205.50	5,295,592.78	250,000.00	355,392.72	38,220.00
-	916	Contribution & Membership Fees	75,000.00	-	-	-	-	-
149,027,462.81		**Sub Total**	**171,150,000.00**	**168,220,824.23**	**8,165,950.78**	**627,809.00**	**159,065,490.96**	**361,573.49**
336,876,440.04		Total Recurrent Expenditure	367,130,000.00	366,280,208.60	83,923,012.26	16,386,476.91	245,896,052.47	20,074,666.96

POSTGRADUATE INSTITUTE OF MEDICINE
UNIVERSITY OF COLOMBO
STATEMENT OF CHANGES IN EQUITY FOR THE YEAR ENDED 31ST DECEMBER 2018

Rs.

Description	General Reserve	Capital					Total
		Capital Grant Spent	Capital Grant Unspent	Gifts & Donation	Capital Outlay From Generated Fund	Other Grants	
Balance as at 31st December 2016	**(85,030,474)**	**893,817,812**	**78,137,467**	**34,364,458**	**335,439,498**	**12,347,192**	**1,269,075,953**
Capital Grant Spent During the Year		259,049,521	(259,049,521)				(0)
Funds Received During the Year			182,000,000			766,031	182,766,031
Amortization Adjustment							-
Previous Years Adjustments	(11,956,180)				(102,571)		(12,058,751)
Contribution to Capital Outlay from Generated Funds	(39,415,521)				31,201,375		(8,214,146)
Capital Grant Rehabilitation & Maintenance							-
Donation Received During the Year				110,000			110,000
Payments during year						(587,995)	(587,995)
Amortization - Capital Grant		(17,981,743)					(17,981,743)
Surplus / (Deficit) for the Period	106,242,686						106,242,686

Balance as at 31st December 2017	**(30,159,489)**	**1,134,885,589**	**1,087,946**	**34,474,458**	**366,538,302**	**12,525,228**	**1,519,352,034**
Capital Grant Spent During the Year	1,902,051	408,297,464	(410,199,515)				-
Funds Received During the Year			412,000,000	51,000		2,637,810	414,688,810
Amortization Adjustment							-
Previous Years Adjustments	13,107,964		134,489			(2,932,568)	10,309,885
Contribution to Capital Outlay from Generated Funds	(17,315,212)				17,315,210		(2)
Capital Grant Rehabilitation & Maintanance	(1,902,051)						(1,902,051)
Donation Received During the Year							-
Payments during year	(3,001,427)					(1,060,590)	(4,062,017)
Amortization - Capital Grant		(16,330,624)					(16,330,624)
Surplus / (Deficit) for the Period	53,726,287						53,726,287
Balance as at 31st December 2018	**16,358,123**	**1,526,852,429**	**3,022,920**	**34,525,458**	**383,853,512**	**11,169,880**	**1,975,782,322**

CASH FLOW STATEMENT FOR THE YEAR ENDED 31ST DECEMBER 2018

Cash Flows from Operating Activities		
Surplus / (Deficit) in Income & Expenditure Account		53,726,287
Adjustments for:		
Disposal Gain	(1,432,000)	
Provision for Gratuity - 2018	5,977,959	
Amortization for 2018	(16,330,625)	
Previous Year Adjustment	10,309,885	
Interest Income	(26,111,879)	
Depreciation for 2018	35,335,022	7,748,362
Operating profit before working capital changes		**61,474,649**
Changes in Working Capital		
Increase in trade and other receivables	28,488,152	
Increase in inventories	(745,735)	
Dicrease in trade payables	(10,289,624)	
Decrease in Prepayments	331,360	
Increase in Accrued expenses	3,369,846	21,153,999
Net cash from operating activities after working capital changes		**82,628,648**
Gratuity paid		(3,658,672)
Net cash flow from operating activities		**78,969,976**
Cash Flows from Investing Activities		
Fund		
Investment	(24,000,000)	
Purchase of property, plant and equipment	(17,647,183)	
Interest from Investment Received	14,717,990	
Capital Work in Progress	(407,965,494)	
Proceed from Disposal of Assets	1,432,000	
Net cash flow from investing activities		**(433,462,686)**
Cash Flows from Financing Activities		
Government Capital Grant	412,000,000	
Proceeds from Unspent Capital Grant		
Proceeds from Other Fund Accounts	(1,699,527)	
Proceeds from Restricted Fund		
Net cash flow from financing activities		**410,300,473**
Net Increase in Cash and Cash Equivalents		**55,807,763**
Cash and cash equivalents at beginning of period		**11,111,364**
Cash and cash equivalents at end of period		**66,919,126**

INTERNAL GENERATED INCOME FROM 2017 TO 2018
POSTGRADUATE INSTITUTE OF MEDICINE

	2017	2018
Registration Fees	28,537,815	26,532,500
Tution Fees	178,931,135	131,209,866
Examination Fees	113,658,112	107,711,800
Others	48,043,898	59,534,685
Total	**369,170,959**	**324,988,851**



17. <u>பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால எதிர்பார்ப்புக்கள் பற்றிய அறிக்கை மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம்</u>

ஆரோக்கியமான சமூகமொன்றை தோற்றுவிப்பதன் ஊடாக இலங்கையில் பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக நிபுணத்துவ மருத்துவ சேவையை மேம்படுத்துதல் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நோக்கமாகும்.

அதற்கமைய, நிபுணத்துவ மருத்துவ சேவையின் தர மேம்பாடு மற்றும் நாட்டின் அனைத்து மக்களுக்கும் (நகர்ப்புற மற்றும் கஷ்டப் பிரதேச மக்களுக்கு) தரமான நிறைவான நிபுணத்துவ மருத்துவ வசதிகளை இலகுவாக மற்றும் பயன்மிக்க வகையில் பெற்றுக்கொடுத்தல் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்பன எமது நிறுவகத்துடன் நேரடியாக நடவடிக்கை மேற்கொள்கின்றன. பேண்தகு அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வதற்காக எமது நிறுவகம் இரண்டு ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தரமான நிபுணத்துவ மருத்துவக் கல்வியை வழங்குவதன் ஊடாக மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் ஒரு ஒழுங்கு நடவடிக்கையாகும்.

தற்போது இந்த நாட்டில் பற்றாக்குறை நிலவும் நிபுணத்துவ மருத்துவத் துறைகளை விருத்தி செய்வதற்காக முன்னுரிமை அளித்தலும் அதற்கமைய தேவையான புதிய நிபுணத்துவ மருத்துவப் பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக நாட்டு மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி ஆயுட்காலத்தை அதிகரித்தல் இரண்டாவது ஒழுங்கு நடவடிக்கையாகும். உதாரணம் : வயோதிப மருத்துவம், மானிட ஊட்டச்சத்து பாடநெறி, குழந்தை மருத்துவம், குழந்தை ஆரோக்கியம் பற்றிய பாடநெறி என்பனவாகும்.

எமது நாட்டின் பொதுமக்கள் அனைவருக்கும் நிபுணத்துவ மருத்துவ சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தல் ஊடாக பொது மக்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தரமான மருத்துவ பட்டப்பின் படிப்புக் கல்வியை மருத்துவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக பொது மக்களின் ஆரோக்கியம் மற்றும் சிறந்த வாழ்க்கையை மேம்படுத்தி அனைத்து ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகளின் சுகாதார வசதிகளை விருத்தி செய்து நோயற்ற நீண்ட ஆயுட்காலத்தை இலக்காகக்கொள்வதன் மூலம் பேண்தகு அபிவிருத்தியை இலகுவாக அடைந்துகொள்ள முடியும்.

இதற்காக நாட்டின் நிபுணத்துவ மருத்துவ சேவைக்கான தேவையை பூர்த்தி செய்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் செயல்முறைகள் ஊடாக தரவுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. நகர்ப்புறத்தைப் போன்றே கஷ்டப் பிரதேச வைத்தியசாலைகளிலும் சேவையாற்றும் நிபுணத்துவ மருத்துவர்களின் எண்ணிக்கை சம்பந்தமான தகவல்களை சுகாதார அமைச்சின் ஊடாகப் பெற்றுக்கொள்ளல்

2. அனைத்து அரசாங்கப் பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களின் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

2. அத்துடன் பாலினம் (ஆண்/ பெண்) மற்றும் ஏனைய சுகாதாரத் தேவைகளின் அடிப்படையில் நோய்களை இனங்கண்டு அதற்கமைய மருத்துவ நிபுணர்களைப் பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். உ - ம்: மகப்பேறு மற்றும் பெண்நோயியல், குழந்தை மருத்துவம், வயோதிப மருத்துவம் என்பனவாகும்.

3. முப்படைகள் மற்றும் பொலீஸ் மருத்துவமனைகள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

5. தனியார் மருத்துவமனைகள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்
அத்துடன் பேண்தகு அபிவிருத்தியின் அடிப்படை நோக்கமான ஆரோக்கியம் மற்றும் சிறந்த வாழ்க்கை என்பவற்றுக்காக இந்த நிறுவகத்தின் ஊடாக மிகச் சிறந்த பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

18. கணக்காய்வறிக்கை

பணிப்பாளர்,
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சபையில் முன்வைக்கப்படும்.

நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அந்தத் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல்

மற்றும் ஊழல் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொய்யான கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முடியுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவகத்தை தொடந்தும் கொண்டுநடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் நிறுவகத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலப்பகுதிகளுக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் நிறுவகம் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் போதுமானளவிலான பொய் கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடு இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் நியாயம் மற்றும் தெளிவான வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பொய்க் கூற்றுக்களின் ஆபத்தை இனங்கண்டுகொள்ளும்போது மற்றும் மதிப்பீடு செய்யும்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடல் ஊடாக ஊழல் அல்லது தவறு காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை நீக்கிக்கொள்வதற்கு, போதுமானளவிலான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக்கொள்ளல் எனது கருத்துக்கு அடிப்படையாகும். பொருண்மையான பொய் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிறுவகத்தின் உள்ளக நிர்வாகம் (கட்டுப்பாடு) தொடர்பான

தெளிவைப் பெற்றுக்கொண்டபோதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடையலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பாக மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் தரப்புக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதுடன், எனது ஆய்வின்போது நிறுவகம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளமையை காண முடியுமாக இருக்கின்றது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எந்த விடயமும் எனது கவனத்திற்குட்படவில்லை.

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு நிறுவகத்துடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமைக்குப் புறம்பான வகையில் தொடர்பு இருத்தல்.

2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் தவிர ஏதேனுமொரு ஏறபுடைத்தாகும் எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இயைந்துசெல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

சட்டங்கள் விதிகள் / பிரமாணங்கள்		**விபரம்**
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை (i) நி.பி. 371 மற்றும் 2015 ஜூலை 14 ஆம் திகதிய, 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	உரிய அலுவலை துரிதமாக நிறைவேற்றியவுடனேயே முற்பணத்தை தீர்க்க வேண்டியிருந்தபோதிலும் 17 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் பெறுமதிமிக்க ரூ. 800,420 முற்பணத்தை தீர்ப்பதற்கு 28 நாட்கள் முதல் 231 நாட்கள் வரையிலான காலம் தாமதாகியிருந்தது.
	(ii) நி.பி. 1646	வாகன ஓட்டக் குறிப்புப் புத்தகங்களில் பயணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்பை பூரணப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.
(ஆ)	1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 4190 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி	வாகனங்களின் எரிபொருள் தகனம் பற்றி அடிக்கடி பரீட்சிக்க வேண்டியிருந்த போதிலும் ஒரு வாகனங்த்தில் 2017.08.02 ஆம் திகதியின் பின்னர் எரிபொருள் தகனம் பற்றி பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ)	2004 ஜூலை 29 ஆம் திகதிய PED/25 ஆம் இலக்க அரச வர்த்தக சுற்றறிக்கை	திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் 50 மில்லியன் ரூபா தொகை மீளாய்வாண்டின்போது நிலையான கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகளுடன் இயைந்து செல்லாத வகையில் அலுவல் மேற்கொண்டிருந்தமை.

2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் தவிர நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க

வகையில் உரிய காலப் பகுதிக்குள் குறிப்பிட்ட ஏற்புடைத்தாகும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டிராமை.

(அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (இ) பிரிவிற்கமைய மீளாய்வாண்டின் தொடர்பான பெறுகைத் திட்டத்தை விபரமான வகையில் தயாரித்திருக்காமை.

(ஆ) 5.4.10 (இ) இன் பிரகாரம் மாதிரி பரீட்சிப்புக்குட்படுத்தப்பட்ட ரூ.4,025,773 பெறுமதிமிக்க 02 தொடர்பாக செயலாற்றுகை பாதுகாப்பை பெற்றுக்கொள்ளாமை.

(இ) 8.9.1 (அ) பிரிவின் பிரகாரம் ரூ.4,439,699 பெறுமதிமிக்க 03 ஒப்பந்தப் பணிகள் தொடர்பாக எழுத்துமூல ஒப்பந்தம் இல்லாதிருந்தமை.

(ஈ) 12 சந்தர்ப்பங்களில் ரூ.1,338,498 பெறுமதிமிக்க வழங்கல் ஒப்பந்தப் பணிகளை விலைமனுக் கோராமல் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 4 சந்தர்ப்பங்களில் ரூ.492,979 பெறுமதிமிக்க ஒப்பந்தப் பணிகளை ஒரே வழங்குனருக்கு வழங்கியிருந்தமை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறுகை சம்பந்தமான முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாமை.

3. வேறு அவதானிப்புக்கள்

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்துவரும் சுகாதார அமைச்சினால் அறவிடப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணமான ரூ.915,750 மற்றும் 2015, 2016 ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டிட வாடகை ரூ.1,681,625 என மொத்தம் ரூ.2,597,375 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் திட்டத்தில் 2018 ஆம் ஆண்டிற்கான பிரதான செயற்பாடுகள், நோக்கங்கள், உப நோக்கங்கள், பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான கால எல்லை வரை இருந்தது. எனினும் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அந்த நோக்கம் நிறைவேற்றப்படுதல் தொடர்பான முன்னேற்றத்தை அளவிடும் குறிகாட்டி குறிப்பிடப்படாதிருந்தமை காரணமாக நிறுவகத்தின் செயலாற்றுகை உள்ளவாறான முன்னேற்றத்துடன் ஒப்பீட்டு ரீதியில் பரீட்சிப்பதற்கு முடியவில்லை. மேலும் செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 பிரதான செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளில் "M D Psychiatry (2018 Prospectus)" போன்ற பாடநெறி மற்றும் "M D Clinical Oncology Prospectus)" போன்ற பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களில் எவரும் பரீட்சையில் சித்தியடையவில்லை.

(ஈ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 12 பதவிகளுக்கான 27 வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருந்ததுடன் பணி ஒப்படை அடிப்படையில் 09 உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 05 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்காக மீளாய்வாண்டில் மொத்தம் ரூ.6,103,072 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் சாரதிகளுக்கான 02 வெற்றிடங்கள் இருக்கையில் அந்த வெற்றிடங்களை நிரப்பாமல் நிறுவகத்தினால் 2018 ஆம் ஆண்டில் ஒரு மாதத்தில் 03 சாரதிகளை ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களின் வாகனங்களை பொருத்தமான இடத்தில் நிறுத்தும்

அலுவலுக்காக மாத்திரம் ஈடுபடுத்தினாலும் அந்த அலுவலை நிரந்தர சாரதிகளின் ஊடாக மேற்கொள்ளாமல் அதற்காக மீளாய்வாண்டின்போது ரூ.2,464,428 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பிரதான வருமான மூலங்களான பதிவுக் கட்டணம், விரிவுரைக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திலும் உள்ளவாறான வருமானத்தில் 24% இலிருந்து 4% வரை குறைவடைந்துள்ளமையை அவதானிக்க முடியுமாகியது. மேலும், வட்டி வருமானத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமனானத்தை தாண்டி 18% விருத்தியும் 06 செலவு விடயங்களுக்கான வரவு செலவு மதிப்பீட்டுச் செலவில் உள்ளவாறான செலவைத் தாண்டி 60% முதல் 95% வரையான வேறுபாடு நிலவியது. 03 செலவு விடயங்களின் உள்ளவாறான செலலவில் மதிப்பீட்டுச் செலவைத் தாண்டி 99% முதல் 2455% வரையான வேறுபாடு நிலவியது. அத்துடன் மதிப்பீடு செய்யப்படாத பல்வேறு வருமானங்களில் 31.5 மில்லியன் ரூபா உள்ளவாறான வருமானமும், ஊழியர் சேமலாப நிதியச் செலவு ரூ.363,307 ஆக இருந்ததுடன் கணிக்கப்பட்ட ஆனாலும் எந்தவிதமான செலவும் மேற்கொள்ளப்படாத வெளிநாட்டுப் பயணச் செலவுக்கு ரூ.1,000,000 காணப்பட்டது. எனவே வரவு செலவை அவ்வப்போது மீளாய்வுக்குட்படுத்தி பயன்மிக்க விடயமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் அன்பளிப்பு நிதி, பட்டமளிப்பு விழாவின் தங்கப் பதக்கத்தை வழங்குவதற்காக கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதன் மீதி ரூ.3,755,600 ஆக நிலவினாலும் அந்த நிதி உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

AB / BK

2019.07.09

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய கணக்காய்வு அலுவலகம்.

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக தங்களால் 2019 ஜூன் 21 ஆம் திகதி அனுப்பப்பட்ட கணக்காய்வு அறிக்கை வரைவு தொடர்பான விடயங்களை இத்துடன் சமர்ப்பிப்பதாக தயவாய் அறியத் தருகின்றேன்.

2.2 <u>சட்டங்கள் விதிகள் / பிரமாணங்கள்</u>

(அ) <u>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை</u>

i. <u>நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 ஜூலை 14 ஆம் திகதிய, 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை</u>

இந்த நிறுவகத்தினால் ஒரு வருடத்தில் சுமார் 136 பரீட்சைகள் நடாத்தப்படுவதுடன் அவற்றில் அநேகமான பரீட்சைகளுக்காக முற் பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த முற் பணத்தைச் செலவிடும் அலுவலை அலுவலர்களிடம் ஒப்படைத்தலானது அவர்களது கடமைகளின் அளவுக்கமைய மிகவும் சிரமமாகவுள்ளது. எனவே அந்தப் பதவிநிலை அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த முற்பணத் தொகையை உரிய எழுதுவினைஞர்களுக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தீர்க்கும் அலுவல்கள் சேவையின் அவசியத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

முற் பணத்தை தீர்க்கும்போது திகதி மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட திகதியை குறிப்பிடுமாறு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018 பெப்ரவரி மாதத்தின் இறுதி மதல் ஏப்ரல் மாதத்தின் நடுப் பகுதி வரை கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்றமையானது அந்தக் காலப் பகுதியில் முற் பணத்தை தீர்க்கும் அலுவல் தாமதமடைவதற்குக் காரணமாகியுள்ளது.

வழங்கல்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் சில சந்தர்ப்பங்களில் உற்பத்தி செய்யப்படும் அல்லது நிறைவு செய்யப்படும் பொருட்கள் இந்த நிறுவகத்திற்கென்றே உருவாக்கப்படும் சந்தர்ப்பங்களில் மற்றும் அந்த நிறுவனத்தினால் குறிப்பிட்ட பொருட்களைப் பெற்றுத் தருவதற்கு முன்னர் முற்பணத் தொகையொன்றை கோரும் சந்தர்ப்பங்களில் மற்றும் அவசரத் தேவைகளுக்கான சந்தர்ப்பங்களின்போது மாத்திரம் அவ்வாறு முற்பணத்தை வழங்கி சேவையின் அவசியத்தின் அடிப்படையில் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் சில பரீட்சை அலுவல்கள் தலைமை அலுவலகத்திற்குப் புறம்பாக ராகமை, கராபிட்டிய, பேராதனை போன்ற மருத்துவ பீடங்களில் மற்றும் குறிப்பிட்ட போதனா வைத்தியசாலைகளில் நடாத்த வேண்டியேற்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத் தொகையை குறுகிய காலப் பகுதிக்குள் தீர்த்தல் சிரமமாகும்.

எவ்வாறாயினும் இந்தக் கால இடைவெளியைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முற்பணத்தை தீர்க்கும் திகதி மற்றும் சான்றுப்படுத்திய திகதியைக் குறிப்பிடுமாறு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், வழங்கப்பட்ட முற்பணத் தொகையின் மீதித் தொகையை சிறாப்பரிடம் (காசாளர்) வைப்புச் செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டிலேயே தீர்ப்பதற்கான வவுச்சர்களை நிதிப் பிரிவிற்குப் பெற்றுக்கொடுத்ததன் பின்னர் அதில் நிலவும் குறைபாடுகளைத் நிவர்த்தி செய்வதற்காக நிதிப் பிரிவினால் மீண்டும் குறிப்பிட்ட மருத்துவ பீடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பின்னர் குறைபாடுகளை நிவர்த்தி செய்ததன் பின்னர் தீர்க்கும் அலுவலுக்காக மீண்டும் அந்த வவுச்சர்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையானது தாமதத்தின் மீது நேரடியாகப் பாதிப்புச் செலுத்தியுள்ளது.

ii. <u>நிதிப் பிரமாணம் 1646</u>

வாகன ஓட்டக் குறிப்புப் புத்தகங்களில் மாதாந்தப் பயணங்கள் தொடர்பான குறிப்புக்களை மாதாந்தம் உரிய வாகனங்களுக்கமைய பொழிப்பு செய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமாகமிகவும் மிகவும் கவனமாக அலுவல் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) <u>1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 4190 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி</u>

NB - 5938 வாகனத்தின் எரிபொருள் பற்றிய பரிசோதிப்பு 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டபோதிலும் 2018 ஆம் ஆண்டில் அந்த வாகனத்திற்கு சாரதிப் பதவி வெற்றிடமாகியமையினால் அதற்காக நிரந்தர சாரதியொருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை இதற்கான காரணமாகும். ஆனாலும் 2019.02.25 ஆம் திகதி இந்த நிறுவகத்தின் வாகனங்களைப் பரிசோதிப்பதற்காக முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திறந்த பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பொறியியலாளரால் இந்த வாகனத்தின் எரிபொருள் பயன்பாடு பரீட்சிப்புக்குட்படுத்தப்பட்டது. அதன் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01)

(இ) <u>2004 ஜூலை 29 ஆம் திகதிய PED/25 ஆம் இலக்க அரச வர்த்தக சுற்றறிக்கை</u>

திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)

2.4 <u>சட்டங்கள் விதிகள் / பிரமாணங்கள்</u>

(அ) 2018 ஆண்டிற்கான தலைமை பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டபோதிலும் விபரமான வகையில் தயாரித்திருக்காதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் பெறுகைத் திட்டத்தை விபரமான வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இணைப்பு 03).

(ஆ) இந்த ஒப்பந்தப் பணியின் பெறுமதி 5 இலட்சத்திற்கும் குறைவாக இருப்பதனால் 10% செயலாற்றுகை பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) அவசர சேவைகளுக்கான தேவையின் அடிப்படையில் சேவைகளுடன் தொடர்பான ஒப்பந்தப் பணிகளின்போது எழுத்து மூலமான ஒப்பந்தங்கள் இல்லாதிருந்தபோதிலும் இதற்குப் பின்னர் எழுத்து மூலமான ஒப்பந்தத்தினை

ஏற்படுத்திக்கொள்வதற்கான அறிவுறுத்தலை விடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) மிக அவசரமான சிறிய அலுவல்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நிறுவகத்தின் மேசன், தச்சன், நீர்க் குழாய் பழுதுபார்ப்பவர் ஆகியோருக்கான வெற்றிடம் நிலவுவதனால் இந்தப் பூமியில் நீர்க் குழாய்கள் காணப்படும் இடங்களை அறிந்திருப்பதுடன் உடனடியாக அலுவல்களை மேற்கொள்வதற்கான வசதிகளைக் கொண்ட நிறுவனமொன்றின் சேவையைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சில சேவைகளை அலுவலக நேரத்தின் பின்னர் மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் விலைமனுக் கோரலின்றி இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. எதிர்காலத்தில் இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

(உ) 2018 ஆம் ஆண்டில் பெறுகை தொடர்பான முன்னேற்ற அறிக்கையை தயாரித்திராதபோதிலும் 2019 ஆம் ஆண்டு முதல் பெறுகை தொடர்பான முன்னேற்ற அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரதி இணைப்பு 03 ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

3. <u>ஏனைய அவதானிப்புக்கள்</u>

(அ) இதற்காக 2009 ஆம் ஆண்டு முதல் நினைவூட்டப்பட்டுள்ளது. அச் சந்தர்ப்பங்களில் பல தடவைகள் சுகாதார அமைச்சினால் பகுதியளவில் அறவிடப்பட வேண்டிய நிலுவைச் தொகையை செலுத்தியுள்ளபோதிலும் வினவல்களில் (ஐய வினாக்களில்) குறிப்பிடப்பட்டுள்ள தொகையை இதுவரை செலுத்தவில்லை. இது சம்பந்தமாக முகாமைத்துவ சபைக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பிரதி மற்றும் நினைவூட்டல் கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 04).

(ஆ) செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான நோக்கங்களில் இந்த நாட்டின் மருத்துவத் துறைக்குத் தேவையான மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவவர்களை உருவாக்குவதனை கூட்டாக அடைந்துகொள்வதனை எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நோக்கத்தின் இறுதிப் பெறுபேறுகளில் வருடாந்தம் 98% அடைந்துகொள்ளப்படுகின்றது. அது தொடர்ச்சியான செயற்பாடாக இருப்பதுடன் அதில் ஒவ்வொரு நோக்கங்களுடன் தொடர்பான எதிர்பார்க்கப்படும் அளவுகள் / சதவீதங்களாகக் குறிப்பிடுதல் சிரமமாகும். மேலும் அந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படும் தொகை குறிப்பிட்ட செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(இ) வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகள் குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான பரீட்சைகளாகும். ஆட்சேர்ப்புப் பரீட்சைகளின்போது சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ள பயிற்சி வெற்றிடங்களின் (Training Slote) எண்ணிக்கையின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றது. அதனால் எந்தளவு விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டாலும் சுகாதார அமைச்சின் வெற்றிடத்திற்குத் தேவையான மாணவர்களின் எண்ணிக்கையை மாத்திரம் ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் காரணமாக அந்தப் பரீட்சைகளில் சித்தியடையும் சதவீதம் 50% ஆகக் கவனத்திற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

மீதி இரண்டு பரீட்சைகளில் ஒரு பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் 50% ஆக இருப்பதுடன் அடுத்த பரீட்சையில் மாணவர்கள் போதுமானளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாதிருப்பதனால் பரீட்சையில் சித்தியடையவில்லை.

M D (Psychiatry) 2013 Prospectus பரீட்சைகளுக்கு 13 விண்ணப்பதாரிகள் தோற்றியதுடன் அதில் 09 பேர் சித்தியடைந்துள்ளனர். M D (Psychiatry) 2008 Prospectus பரீட்சைக்குத் தோற்றிய ஐந்து மருத்துவர்களும் முதலாவது தடவைகளில் பரீட்சைகளில் சிதியடைந்தவர்களாவர். அவர்களிடையே இருவரின்

மூன்றாது முயற்சியும் மேலும் இருவரின் ஐந்தாவது முயற்சியும் ஏனைய விண்ணப்பதாரிகளின் ஆறாவது முயற்சியுமாகும். இவ்வாறு முதலாவது தடவைகளின்போது பரீட்சைகளில் சித்தியடையாத விண்ணப்பதாரிகள் இறுதி முயற்சிகளின்போது பரீட்சைகளில் சித்தியடைந்தமை ஊடாக அவர்களது வெளியீடு (output) சிறந்த மட்டத்தில் நிலவுவதில்லை. 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட M D (Psychiatry) பரீட்சைகள் இரண்டிலும் சித்தியடையும் 50% சதவீதம் மொத்தமாக ஆகும்.

அந்தந்தப் பாடங்களில் சித்தியடைவதற்குரிய அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையினால் குறிப்பிட்டளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத மருத்துவர்களை சித்தியடையச் செய்வதற்கான வாய்ப்பு இல்லை. மேலும், இந்த நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையும் மருத்துவர்கள் நாட்டு மக்களின் தேவை கருதி நாட்டின் மருத்துவமனைகளுக்கு நியமிக்கப்படுவதனால் உரிய முறையில் பரீட்சைகளில் சித்தியடையாத மருத்துவர்களை சித்தியடையச் செய்வதன் ஊடாக நாட்டின் தேவை நிறைவேறாதிருப்பதுடன் அது பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருத்தல் இந்த நிலைமை ஏற்படுவதற்கு காரணமாகும்.

(ஈ) மருத்துவர்களுக்கு பட்டப்பின் படிப்புப் பட்டத்தை வழங்கும் இலங்கையில் அமைந்துள்ள ஒரே நிறுவனம் எமது மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமாகும். மருத்துவ நிபுணர்களை உருவாக்கும் செயற்பாட்டில் நிதமும் எமது நிறுவகம் நேரடியாக சுகாதார அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வதுடன் அதன் காரணமாக அந்தத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 365 நாட்களிலும் தொடர்ந்து மற்றும் உத்வேகத்துடன் எமது நிறுவனத்தின் சேவையை மருத்துவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு எமது நிறுவகம் கடமைப்பட்டுள்ளது.

மேலும், எமது நிறுவகத்தில் மருத்துவர்களுக்காக நடாத்தப்படும் விரிவுரைப் பாடநெறிகள் மற்றும் பரீட்சைகள் போன்ற கல்விசார் நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியில் பாரியளவில் அதிகரித்துள்ளது. அதற்குத் தேவையான சேவையை தொடர்ந்து வழங்குவதற்கு கல்விசார் மற்றும் கல்வி சாரா ஆளணி மிகவும் அவசியமாகவுள்ளது.

வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்போதான தாமதங்கள், அமைச்சரின் பெயர்ப் பட்டியல் ஊடாக வெற்றிடங்கள் நிரப்பப்படும் பதவிகளுக்காக கிடைக்கும் பெயர்ப் பட்டியல்கள் கிடைப்பதில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் மேலும் சில பதவிகளுக்காக உள்ளக ரீதியிலான அறிவித்தல்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் சில சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரிகள் இல்லாதிருத்தல், மேலும் சில சந்தர்ப்பங்களில் கிடைத்த விண்ணப்பங்களுக்காக பரீட்சையை நடாத்தியபோது விண்ணப்பதாரிகள் பரீட்சைகளில் சித்தியடையாமையின் காரணமாக மீண்டும் பத்திரிகையில் விளம்பரங்களைப் பிரசுரித்து அதனூடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளை நியமித்துக்கொள்ளல் போன்ற நீண்ட செயற்பாடுகள் காரணமாக வெற்றிடமாகியுள்ள பதவிகளை நிரப்புவதற்கு நீண்ட காலம் எடுத்ததன் அடிப்படையில் தாங்களால் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன. மேலும், தாங்களால் குறிப்பிடப்பட்ட அநேகமான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வெற்றிடமாகியுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்வரை தொடர்ந்தும் மருத்துவர்களுக்கான சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக மாத்திரம் தாங்களால் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் எமது நிறுவகத்திற்கு ஊழியர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நிரந்தர ஊழியர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டவுடனேயே ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பணி ஒப்படை அடிப்படையில் சேவையாற்றும்

ஊழியர்களை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றேன்.

(உ) 2018 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் சாரதிகளுக்கான வெற்றிடங்கள் 02 நிலவியது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேடமான விடயங்கள் காரணமாக நிறுவகத்தின் நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் சாரதிப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பை தற்காலிகமாகக் காலந்தாழ்த்தி தனியார் நிறுவனமொன்றிடமிருந்து சேவையைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்காக உரிய கேள்வி நடைமுறையைப் பின்பற்றி பணிப்பாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் மூன்று சாரதிகளின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- நிறுவகத்தில் நடாத்தப்படும் பரீட்சைகள், விரிவுரைகள், கல்வி சபைக் கூட்டங்கள், பல்வேறு உப குழுக்களுக்காக அநேகமான மருத்துவ நிபுணர்கள் நாளாந்தம் நிறுவகத்திற்கு வருகை தந்ததுடன் அவர்களது வாகனங்களை நிறுத்துவதற்காக நிறுவக வளவிற்குள் போதுமானளவு இடவசதிகள் இல்லை.
- எனவே, கொழும்பு மாநகர சபையின் அனுமதியின்கீழ் நிறுவகத்தின் முன்புறப் பாதையின் இருபுறமும் அந்த வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு நிறுவகத்தினால் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட இடவசதிகளைக் கவனத்திற்கொண்டு இரண்டு வரிசைகளில் வாகனங்கள் நிறுத்திவைக்கப்படுவதுடன் தேவைக்கேற்ப வாகனங்களைக் கையாளுவதற்காக சாரதிகளை இணைக்க வேண்டியுள்ளது. விசேடமாக பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்படாதவாறு துரிதமாக அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.
- நிறுவகத்தில் நிரந்தரப் பதவியை வகிக்கும் அனைத்து சாரதிகளையும் குழாமிற்குள் உள்வாங்கி சேவையின் அவசியத்திற்கேற்ப உரிய கடமைகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுவதுடன் அவர்களுக்கு கடமை நேரத்தில் வெளி வாகனங்களை ஓட்டுவதற்கு அனுமதி கிடையாது.
- எனவே தீவிரமான சேவைக்கான அவசியத்தின் அடிப்படையில் உரிய காப்புறுதிக் காப்பீட்டுடனான சாரதிகள் மூவரின் சேவையை தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நிறுவகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், அந்த சாரதிகளின் சேவை முகாமைத்துவம் குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுவதனால் மிகவும் இலகுவாக நிறுவகத்தின் தேவைப் பிரகாரம் தேவையான நேரங்களில் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் நிறுவகத்திற்கு வாய்ப்புக் கிடைத்தமை விசேட அனுகூலமொன்றாகும்.
- அத்துடன், நிரந்தர சேவையில் ஈடுபடும் சாரதிகளின் மற்றும் தற்காலிக சாரதிகளின் தேறிய சம்பளங்களிடையே முரண்பாடும் நிலவவில்லை.
- மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்திற்கொண்டு நிலவும் சேவைக்கான தேவையின் அடிப்படையில் தற்காலிகமாக தனியார் நிறுவனமொன்றின் ஊடாக மூன்று சாரதிகளின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ஊ) குறிப்பிட்ட ஆண்டில் உண்மையாக பதிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை உண்மையான வருமானத்தின் மீது தாக்கம் செலுத்தும். ஆனாலும் மதிப்பீட்டைத் தயாரிக்கும்போது பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையின் அடிப்படையில் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டாலும் சுகாதார அமைச்சில் ஏற்படும் வெற்றிடங்களின் அடிப்படையில் பதிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மாற்றமடைதல் இதன் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்தியுள்ளது. மேலும், அனைத்துப் பாடநெறிகளும் கணக்காய்வாண்டில் ஆரம்பிக்கப்படாமையும் கல்வியாண்டானது ஜனவரி மாதம்

முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் மாத்திரம் இருக்காமையும் இதன் மீது தாக்கம் செலுத்தியுள்ளது. கடந்த ஆண்டில் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளப்படாதிருந்தாலும் அவ்வாறான செலவுகளுக்காக மதிப்பீடு மேற்கொள்ளாதிருத்தல் சிக்கலாக இருப்பதனால் எப்போதும் அதற்கான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

(எ) அன்பளிப்புக்கள் நிதியத்திலிருந்து பட்டமளிப்பு விழாவின்போது தங்கப் பதக்கம் வழங்குவதற்கான நிதியை ஏனைய செலவுகளுக்காகப் பயன்படுத்தினால் தங்கப் பதக்கத்தை தயாரிப்பதற்குத் தேவையான வட்டி வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான அடிப்படை நிதியமொன்று இல்லாமை காரணமாக இந்த நிதியத்தை ஏனைய செலவுகளுக்காகப் பயன்படுத்தாதிருப்பதற்கு காரணமாக இருக்கின்றது.

பணிப்பாளர்
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்.